உ

சிவமயம்.

யாழ்ப்பாணம்

மகாவித்துவான்

செகராசசேகரமகாராஜா அவர்களால்

இயற்றுவிக்கப்பட்ட

செகராசசேகரமாலை.

யாழ்ப்பாணத்தைச் சார்ந்த நல்லூர்

இரகுநாதையரவர்கள்

பரிசோதித்தது.

அவரது தத்தபுத்திரர்

சிவராமலிங்கையரால்

ஷையூர்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

விசுவாவசுஸ்ரீ ஆவணிமீ.

சோதிடபரிபாலனமடம்

உ

கோக்துவில்

சோதிடப்பிரகாசயந்திரசாலைப்

புத்தகவிளம்பரம்.

[தபாற்செலவு வேறே.]	ரூபா.	அணா
விதானமாலை.— இது சோதிட நூல்களுள் மிக விசேட்டமானது. சோதிடர்க்கன்றி ஏனையோர்க்கும் பயன்படக்கூடியது. ...	க.	00.
சரசோதிமாலை.—இது சோதிடஸ்கந்தங்கள் மூன்றனுட் பின்னையவாகிய சங்கிதாஸ்கந்தத்தையும் சாதகஸ்கந்தத்தையும் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறுவது.	0.	கஉ.
சந்தானதீபிகை.—இது சந்தானபலனைச் சுருக்கியும் விளக்கியுங் காட்டுவது...	0.	அ.
பாகிதம்.—இது சாதகாதிகட்கு உபயோகமாயுள்ள கிரகஸ்புடங்களை விளக்கிக் காட்டுவது...	0.	ச.
செகராசசேகரமாலை.—இது யாழ்ப்பாணத்தி லரசுபுரிந் திருந்த செகராசசேகரமகாராசாஅவர்களால் இயற்றுவிக்கப்பட்ட சிறந்த சோதிடநூல்...	0.	ச.
நகுலமலைக்குறவஞ்சி.—இது யாழ்ப்பாணத்திலே வாசஞ்செய்த பிரபுக்கள், பிராமணகுருமார், நாட்டுக்கோட்டை நகரத்தார் முதலியோர்களையும், அங்கங்குள்ள ஊர்கள், தடாகங்கள் முதலியவைகளையும், இடையிடையே வர்ணித்தும், மடக்கு, யமகம், சிலேடை, தொனி முதலிய அலங்காரங்கள் அமைத்தும் நகுலமலைமீதும், மாவைக் கந்தசுவாமிமீதுமாகச் செந்தமிழிற் செய்யப்பட்டது	0.	ரு.
சூடாமணி நிகண்டு முதலாவது தேவப்பெயர்த்தொகுதி.—சொற்பொருள்விளக்கமென்னும் உரையோடு...	0.	ச.
சூடாமணிநிகண்டு இரண்டாவது மக்கட்பெயர்த்தொகுதி—சொற்பொருள்விளக்கமென்னும் உரையோடு.	0.	ரு.
உரிச்சொனிகண்டு.— கஉ - தொகுதியும்	0.	சு.
ஆத்திசூடிவெண்பா.— இது ஆத்திசூடியிலுள்ள "அறஞ்செயவிரும்பு" முதலிய சூத்திரங்களை முறையே இறுதியிலடக்கிச் செய்யப்பட்டது. ஒவ்வொரு வெண்பாவிற்கும் ஒவ்வொரு கதை எழுதப்பட்டிருக்கின்றது...	0.	ச.
நீதிநெறிவிளக்கம்.—இது இப்போது விசேஷமான உரையுடன் அச்சிடப்பட்டிருக்கின்றது.	0.	சு.
நீதிவெண்பா.—உரையுடன்...	0.	ச.
இலங்கைப்பூமிசாத்திரம் (ச-ம் தரத்தார்க்கு.)—இது உபாத்தியாயர்களுக்கும், பால மாணுக்கருக்கும் உபயோகமான பல விளக்கவுரை, குறிப்புரை, வரைவிலக்கணங்களும் அடங்கிய ஓர் புதுப்பதிப்பு...	0.	சு.


பரித்தித்துறை
உடுப்பிட்டி
அச்சுவேலி
பண்டத்தெருப்பு
தெல்லிப்பழை
அளவெட்டி
மானிப்பாய்
வட்டு
கோட்டை
சுழிபுரம்
ஏழாலை
வரணி
வேலணை
காரைதீவு
புங்குடுதீவு
நெடுந்தீவு
நயினாதீவு
மண்டைதீவு
பாலைதீவு
இரணைதீவு
யாழ்ப்பாணம்
சாவகச்சேரி
உசன்
பளை
ஆனையிறவு
பூநகரி
இலங்கை
LANTON.

உ

கணபதிதுணை.

படல அட்டவணை.

விஷய சூசிகை.

உ

கணபதிதுணை.

சிறப்புப்பாயிரம்.

எழில்வாய்ந்தமணிமௌலித்துளவணிமாறசரதன்சேயெனவந்தெய்தித்
தொழில்வாய்ந்தவிளவலொடுசென்றுமுனிவோனினருள்சுரந்துகாத்துப்
பொழில்வாய்ந்தமிதிலைநகர்வில்லிறுத்துத்திருவைமணம்புரிந்துவெண்சங்
குழிவாய்ந்தமணிகொழிக்குந்தன்னகர்வந்தன்னைதருமுரையைவேண்டி. (௧)

வேறு.

மின்னுடனெடியகானகம்புகுந்துவிராதனைமாயமாரீசன்
றன்னைவாலியையேழ்மராமரங்களைவெஞ்சாயகமொன்றினாற்றடிந்து
மன்னுநீர்வேலையடைத்தடலிலங்கைவளநகர்புகுந்தெழிற்கும்ப
கன்னனையரக்கர்கோவினைச்செயித்துக்கமலநாயகிசிறைகடிந்து. (௨.)

கருங்கடற்சேனைவெள்ளமுந்தானுங்கந்தமால்வரைப்புறத்தணுக
விருங்கதத்தரக்கன்சாயைவிட்டகன்றவியல்பினைத்திருவுளத்தெண்ணி
யருங்கலைப்பொதியமாமுனிக்குரைப்பவவனுமத்தலத்தினதியல்பைப்
பெருங்கதைப்படுத்தவிசயித்தந்தப்பெருங்கதையாதரம்பிணிப்ப. (௩)

அந்தமாதலத்திலரன்றனைத்தாபித்தருச்சனைபுரிந்துதன்னாமஞ்
சிந்தையாலருளியப்பதிதனக்குத்திருப்பெயரன்னதேயாக்கி
நந்தவில்பஞ்சக்கிராமவேதியராய்நான்மறைப்பொருளுளம்பிரியாப்
பைந்தொடைப்பாசுபதர்களைஞ்ஞூற்றுப்பன்னிருவரைவரவழைத்து. (௪)

பூசனைசெய்ம்மினீரெனக்கருணைபுரிந்தவர்தங்களிலிருவர்
காசினிதாங்கும்படிவரங்கொடுத்துக்கமழ்செழுந்துளபமாலிகையு
மாசறுசுருதியாரியவேந்தென்றணிமணிப்பட்டமுங்கொடுத்துத்
தேசுறுகுடையுமொற்றையும்வெற்றிதிகழ்விடைத்துவசமுநல்க. (௫)

வேறு.

அன்றுமுதற்சதுர்யுகநாலாறிற்புவிபுரந்தவரசர்தம்மில்
வென்றிதிகழ்மீனவன்முன்செப்பேடங்கத்தழைக்கும்வேதவேந்துஞ்
சென்றுகருநாடகரையந்தரவல்லியிற்பொருதுசெயித்தவேந்துங்
கன்றிவருமதவேழக்கரந்துணித்துப்போசலனைக்கடிந்தவேந்தும். (௬)

அடற்கரிமூவாயிரத்தோடெழுநூறுபாவலருக்களித்தகோவும்
விடைக்கொடியுஞ்சேதுவுநீள்கண்டிகளொன்பதும்பொறித்துமிகைத்தகோவும்
வடக்கெழுவாடைக்குமிளந்தென்றலுக்குந்தன்குலப்பேர்வழங்குகோவுங்
கடக்கலுழியத்தினையிரவலர்தங்கட்களித்தகருணைக்கோவும். (௭)

மற்றுமுள்ளபெருந்தகைமையிக்குலத்துப்புவிபுரந்தமன்னர்தாமும்
வெற்றிதருதிருப்புயத்துப்பரித்தபடிதனிதரித்தவிஞ்சைவேந்தன்
கற்றதிறன்மற்படையைத்துரந்துகச்சாய்த்துறையினில்வெங்கண்டவாளான்
கொற்றமிகுவட்கருயர்தென்றிசைக்குச்செலவிடுத்தகுருதிவேலான். (அ)

கோமாறன்கரகமலமோடைபட்டங்குளமீதுகுவியக்கண்டு
மாமாரிமதக்கலுழிக்கிளையானைசெம்பொனுடன்வழங்குவேந்தன்
பாய்மாவுநிதிக்குலமும்பட்டமுநீடரசுரிமைப்பதியுமிக்க
தேமாலைபுனைபுயத்தேமத்தையர்கோன்றனக்களித்தசெங்கைவேந்தன். (கூ)

சேகரிக்குமணிமவுலிப்பாரரசர்செம்பொனுடன்றிகழ்ந்தவென்றிப்
பாகரிக்குங்களியானைத்திறையளித்துப்பதாம்புயங்கள்பணிந்துவாழ்த்த
மோகரிக்குஞ்சலஞ்சலங்கண்முழங்குகடற்கலைப்புவனிமுழுதுந்தந்த
மாகரிக்குஞ்சேடனுக்கும்பொறைநீக்கிப்புரந்தபுகழ்வரைந்தமார்பான். (க0)

ஐந்தருவுநவநிதியுங்குலமணியும்பொன்முகிலுமாவுமொன்றாய்
வந்தனையகொடைக்குரிசில்வரியளிகளிசைகுலவுவனசத்தாமன்
சந்ததமுந்தருமநெறிகோடாதசவப்பெருமான்றழைத்தகீர்த்திக்
கந்தமலையாரியர்கோன்செகராசசேகரமன்கங்கைநாடன். (கக)

தன்கடவுட்சுருதிகளின்மணமெனுஞ்சோதிடமதனைத்தலத்தின்மீது
மின்குலவுதென்கலையாற்றருகவெனவருள்புரியவிருத்தப்பாவாற்
பொன்குலவுசெகராசசேகரமாலையைச்செய்தான்பொருந்துமேன்மைத்
தொன்குலவுமிராசவிராமேசனருள்சோமனெனுஞ்சுருதியோனே. (கஉ)

பாயிரம் முற்றிற்று.

உ

கணபதிதுணை.

செகராசசேகரமாலை.

கடவுள்வாழ்த்து.

விநாயகவணக்கம்.

எழில்வாய்த்தமணித்திகிரித்திருநெடுமாலுந்தியின்வந்திணங்குமாதித்
தொழில்வாய்த்தசதுர்முகத்தன்றிருச்சுருதிப்பொருளாகுந்துய்யகார்வண்
டெழிவாய்த்ததேனிதழிச்சிவனருளுமைங்கரத்தானுலகமெல்லாம்
பொழில்வாய்த்தமலர்சொரிந்துவாழ்த்தெடுக்கும்பதமலர்கள்புகழ்தல்செய்வாம்.()

சிவபெருமான்.

சங்கரனைப்பிறைவேணிப்பிணையிருங்கைப்பிரசநறுந்தாமத்தாம
வங்கணனைப்புரமெரித்தவாடகவான்கோதண்டத்தானைமானேர்
பங்கினனைக்கடுத்துளிக்குந்துளையெயிற்றுப்பஃறலைவெம்பகுவாய்நாக
கங்கணனைக்கனலுநுதற்கண்ணனைவிண்ணவனைக்கருத்தில்வைப்பாம். (௨)

விட்டுணு.

நாரணனைப்பயோததியினனந்தலைவாயனந்தமுடிநாகப்பாய்வாழ்
ஆரணனைப்பிரசமுறையணிகமலத்திருப்பூத்தவாகத்தானைப்
பூரணனைமலர்ப்பூவைப்பொருவுருவப்பொற்போனைப்புணரிப்பாரேழ்
பாரணனைத்திகிரிவிடாப்பங்கயக்கைப்பெருமானைப்பணிதல்செய்வாம். (௩)

சரசுவதி.

படிகநிறத்திருமேனிப்பவளவிதழ்ச்செங்காந்தட்பைம்போதங்கைக்
கடிகமழ்பூங்கருங்கூந்தலிணைச்செந்தாட்குவளைவிழிக்கற்பின்பொற்பார்
வடிவுளவெண்டாளநகைக்கமலமலர்ப்பீடிகைவாழ்மங்கைதுங்கப்
பொடிமலராலயனுவிற்புக்கிருப்பாளெமக்கன்புபுரிவாடானே. (௪)

முதனூலாசிரியர் வணக்கம்.

காசிபன்வசிட்டனத்திரிபைலன்கௌதமனிருசீகனுராயர்
தேசுறுபட்டர்திவிக்ரமரகத்தியன்சியவனனம்பொன்னேபிருகு
மாசில்கல்யாணவன்மனுரதன்சீர்வற்சனேகற்கநல்வராகன்
பூசுறுதேவராதனென்றினையோர்பொன்னடிசென்னிமேற்புனைவாம். (௫)

அவையடக்கம்.

வேறு.

வனைந்துமாமுனிவோர்சொன்னவடகலைச்சோதிடத்தைப்
புனைந்ததென்கலையாற்சட்டைபூட்டியவிதனைக்கேட்டு
முனிந்திடவேண்டாநல்லோர்முற்றுமாராய்ந்துகுற்ற
நினைந்ததையகற்றிநன்காய்நிச்சயித்திடுகைநீரே. (௬)

முதலாவது

மகளிர்விவணப்படலம்.

நிஷேகவிதி.

புண்ணியவேதாகமங்கள்புகல்காலத்திருவோரும்பொருந்துவேலைக்
கண்ணியசீர்க்கருவழியாவகைவாசீகரணமுதற்காவல்பண்ணி
யெண்ணியவன்னதுக்குலகோரிசைத்தபரிகாரமுடனிறையோன்பூசை
திண்ணியமந்திரமருந்துகனலியற்றிநிஷேகவிதிசெய்யவேண்டும். (௧)

அத்தமுருடேரோணமனுஷமிரேவதிமூலமனிலஞ்செக்கோ
டுத்தரமூன்றுத்தமமான்றலைபுரவிகரும்பவிட்டமுறைதேர்பூசஞ்
சித்திரைமத்திமமிவைகளொழிந்தவையாடவன்றன்சென்மமூன்று
மெத்தியநாள்கெட்டாநீரேழிரண்டாம்பக்கமிவைவேண்டாவென்னே. (௨)

வேறு.

ஏறுகேசரிவணிகன்கடகந்தண்டிருங்கன்னிசாபமீனெழநற்கோட்கள்
பேறுறுகண்டந்தன்னிலொன்பானைந்திற்பிறங்கவிருநாலுசுத்தம்பெருகநாளுங்
கூறுமிராசியும்பொருந்தச்சோமன்புந்திகுருவெள்ளியிவர்வாரங்கூடமற்ற
மாறுறுபாபோதயங்கள்மருவாவண்ணம்வகைதெரிந்தாதானவிதிவழுத்துவாயே.

காலநிர்ணயம்.

வேறு.

பூப்புறுநாட்டொடுத்தீரெட்டையுட்கர்ப்பம்பொலியுமென மறைகற்றபெரியோர்சொற்றூர், நீப்பிதன்முன்னொருநான்குஞ்சுத்தநாளாநிகழுமிதிலாதானநேருங்காலைக், காப்புறுவாணுண்மகவுமற்றுமெல்லாங்கனங்குழையாய்குன்றுமுயர்பிதிர்கட்கன்றி, மீப்பயிலுந்தேவகன்மமதற்கைந்தாநாள்மிக்கவதிற்குறையொண்ணுவிளம்புங்காலை. (௪)

பிரதமார்த்தவவிதி.

ஆண்டிருநான்கினிற்கவுரிமும்மூன்றுருகுமதுபகரிலுரோகிணியீரைந்துகன்னி, கூன்டவதன்மேலிரச்சுவாலையென்றுகுறித்தனர்சோதிடவிதிகள்குலவுநல்லோர், வேண்டுபகன்முதற்பத்துத்தமநடுப்பத்துவிளங்குங்கால்மத்திமம்பிற்பத்தோடாய், நீண்டவிராவதமநல்லோர்வாரமாயினெடுங்கண்ணாய்நல்லதெனநியமிப்பாரே. (௫)

தெருட்சி.

பதிமரிப்புச்சுகம்வாழ்வுமக்கட்பேறுபயில் மகவுகுணம்புதல்வர்மகச்சாக்கண்ணி, துதிகருமக்கேடனைதயானிமைந்தர் துலங்குசல்மாதாவகத்திற்றுய்த்தலென்றே, விதிமுதலாந்திதியாதிஞாயிறாதிமிக்கமகவின்மைகுணம்வீயுங்காந்தன், முதிர்மகவுபலநன்மைசுகங்கேடென்றே மொழிந்தனரிப்படிப்பலன்கண் முன்னுவாயே. (௬)

அனலாதிநாலுமூன்றடைவிலெண்ணி யரும்புதல்வர்நோய்வாழ்வுமகவில த்த, நினைபதிசாவிதவைகுணமின்மையென்றே நேடுகமேடாதி பலநிகழ்த்துங் காலை, வினையமுறுசாகசம்பேரசதிமைந்தர்மிகல்குலக்கேடறைசேய்சாவாழ்வுந ன்மை, வனையுமெழிற்பரத்தைகுணமின்மைநோய் மெய்வாழ்விலிசீர்மடந்தை யெனவழங்குவாயே. (எ)

நல்லசுபோதயமம்சம்பார்வைமிக்கநன்மைகளாங்கதிருதயமரிப்புத்திங்கள், சொல்விலுறுமாதாவகத்திருக்குஞ் செவ்வாய்சுதரின்றிப்புந்திமகச் சிறக்கும்வாழ் வா, மல்லலுறுங்குருவெள்ளிநன்மைசாலவருச்கன்சேய் சண்டையிரண்டரவுந் தோன்றிற், புல்லியதீங்கெனவுளத்திற்கொள்வாய்தீயோர்பொருந்துதையவர்க்க மெலாம்பொல்லாவென்றே. (அ)

ஆரூடலக்கணம்.

வச்சிரனின்மகவைந்துவெள்ளையாடைவன்னியிருமூன்றுகறுப்பியமனெட்டு
நிச்சயஞ்சேர்கோடிமடிநிருதிவந்திநிகழ்மலினங்கலைவருணனீடுவெள்ளை [ள்
மெச்சுமகவாறுமருத்தைந்து செம்மைமிகுபுடைவைகுபேர னிரண்டைந்துமக்க
தச்சபழஞ்சீலைபதினொன்றுமக்கடலையெழுத்துக்கலையீசன்சாற்றினனே. (கூ)

வஸ்திரபலம்.

கலையினில்வெள்ளைசுகங்கறுப்பாடைகாந்தனுக்கழிவதாங்கோடி
நிலைபெறுசதியாமழுக்கெனில்மிடிமைநேருநல்வெண்மைமேனிகழ்ந்த
மலிபதிவிரதைசெம்மைநோய்பழையதலைமகன்றுர்ப்பதியெழுத்துத்
தலைபடுகலையேலாசிவைவாழ்வுதருமெனவறிந்திவைசாற்றே. (க0)

ருதுபலம்.

மூன்னுறத்தானேகண்டிடிற்றுக்கமுதிர்விலாக்கன்னியர்காணில்
மன்னியசெல்வம்புருடரேற்றீதாமங்கலமங்கலமடவார்
பன்னுவைதவமாம்விதவையர்காணிற்பதிக்குநோய்நோயினரென்னிற்
றுன்னியசார்வோரெனின்மிடிபிறரேற்சுகமெனத்துடியிடைசொல்லே. (கக)

உயர்பெனிலுயர்பாம்வாகனந்தன்னிலோங்கியவாகனமுண்டாம்
பயமுறுநதியின்கரையிடைக்காணிற்பண்ணியதனம்பலபலிக்குந்
துயர்வறுபுணர்வின்கண்ணெனினிலமாந்தூயதன்வீடெனிற்சுகமாம்
நயமுறுபுறமேல்வழக்கதாம்வாய்தனல்மகவழிவெனநாடே. (கஉ)

தலைபடுமெண்ணெய்நேரத்திற்காணிற்சாற்றியமரணமாமுழுகு
நிலையினின்மிடியாம்போசனகாலநிகழ்சுபபோசனநேரு
மூலைவுறுசயனமெனிற்பிதாமரிக்குமோங்கியநடைபதிநாசம்
கலவிரைநோயாம்பணிவெனிற்சுபமாய்நாட்டினர்வடகலைநரரே. (கந)

பும்சவனம்.

வேறு.

மூன்றுறுநான்கெட்டாந்திங்கடம்மின்முழுமதியின்பெலந்தோன்றப்பூசத் தோணத், தான்றுயவலவனெடுதண்டுகன்னியல்லாதராசிகளினன்கோமொன் பா, னேன்றுயபன்னன்கிருவாக்கள்போக்கியிசைந்துறுநற்பக்கத்தில்வாரம்வெ ள்ளி, வான்றுவுபுதன்திங்கள்குருவிற் பும்சவனமிருநான்கிடஞ்சுத்தம்வாய்ப்பச் செய்யே. (கச)

சீமந்தம்.

மன்னுமுதற்கருப்பமதற்குரிய மாதவகையானுன்காறெட்டா மாதந்தம்மி,
லுன்னரியமறையோர்க்குத்தகுஞ்சீமந்தமுலகுகனிற்செய்யவிதியுளதாமோணங்,
கன்னிகுருப்புநர்தமிரேவதிதேர்மும்மீன்கருதியமூன்றுத்தரத்திற்கவிமாதிங்கள்
பொன்னுறுவாரத்தரிதேணீக்கிப்பக்கம்பொருந்தியசித்திரையிருத்தைபோக்கிக்
கொள்ளே. (௧௫)

விட்டுணுபலி.

சிறந்ததிங்களிருநான்கின்மூற்பக்கத்துச்செப்பியவேழிராறுந்திதிகடம்மி
லறந்தருநாடிருவோணமாதல்வையமாதலிவைசம்பவிக்கல றக்கார்நீக்கி
யறைந்தபகற்பூருவான்னத்தாலன்றிமத்தியானத்துள்ளேயாதல்
நறுங்குழலார்வயின்கர்ப்பம்பிறக்கவிண்டுநல்லபலியிடுவதற்குநவின்றதாமே. ()

சூதிகாக்கிருகம்.

"நவ்விகரும்பிரேவதிமான்றலைசேர்சோதிநற்றுலமுத்தரமூன்றுதியோணஞ்,
செவ்விய சித்திரையிவையிற்குடந்தேளன்றிச் சிறந்தொழிந்தவிராசிகளிலிருத்
தைபோக்கிக், கவ்வையறுநற்றிதியிற்காரிதிங்கள்கவிகுருமால்வாரமிவையனுகூ
லிக்க,வெவ்வமினற்கோளுதயஞ்சேரநோக்கமெழச்சூதிகைக்கிருகத்தேகுவாயே.

சூதிகாக்கிருக சக்கரம்.

கண்ணியவக்கிருகத்தையறைபன்னிரண்டாக்கிக்கண்டதனினடுநான்குநீக்கிமீது
பண்ணியவைசாங்கியத்தின்மீனந்தன்னைப்பாரித்துமேடமுதல்வலமாய்வைத்து
நண்ணியவிவ்விராசிகளின்மகரஞ்சிங்கநண்டுதுலையாறெட்டுநான்மூன்றுகா [ரே.
திண்ணியவரொழிந்தவைகணன்றுமென்றுதெய்வவடநூலுணர்ந்தோர்செப்பினு

மகளிர்வினைப்படலம் முற்றிற்று.

இரண்டாவது

மைந்தர்வினைப்படலம்.

சாதகன்மம்.

சாற்றியிடுகற்புதல்வன்சாதமானதற்காலத்திரணமதுதணத்தல்வேண்டி
யேற்றமிகுதந்தைதிதிவாரநாட்களின்றிமகக்காண்பதுலகியல்பதன்றி
மாற்றரியநாட்களிந்தாற்சுபகாலங்கண்மதித்துமகக்கண்டுமனமகிழநாபி
தேற்றமுறவரிவதன்முன்சாதகன்மஞ்செய்ததற்பினரிட்டவிதிதேருவாயே. (௧)

மாதா அரிட்டம்.

பிறத்தலுறுமோரைக்கெட்டேழிற்பாவர் பிறங்கவவர்நோக்குறினுமன்றிச்சென்ம
துறப்பெறுமோரைக்கெட்டீராறேழாறிலுதித்திடினுஞ்சுபர்மகவிஞெமாதா [த்
விறத்தலுறுமாறீராறிவையிற்பாபரெழின்மாதாவின்றிமகவிறக்குமேமெட்
டறிக்கையுறுபாவருறின்மைந்தரின்றியாங்கிலைடமாதாமரிக்குமணங்கனே.(௨)

பிதா அரிட்டம்.

கதிரவன்றனிராசிக்கெட்டதனின்மந்தன்காசினிசேய்கலந்துசபர்விழிப்புமின்றி
முதிர்வுறுமக்காலத்துப்பிறத்தல்செய்யின்முன்னியதாதாமரிக்குமுடவன்செவ்வா
கதியுறுமச்சரராசியிடையிற்சார்ந்துதணப்பின்றிவிழிக்குங்காற்பரதேசத்துப் [ய்
பிதிரகல்வனெனவடநூல்கற்றறிந்தபெற்றியினோர்சொற்றபடிபேசுவாயே. (௩)

மாதுலர் அரிட்டம்.

சென்மத்திலீராறேழெட்டிற்பாபர்திகழுங்கால்மாதுலர்க்குத்தீதாம்பத்தி,
னன்மொய்த்தகதிர் மதியநான்கிற் பாபர்சனியேழில் வெள்ளியுறினுசம்வெந்து,
தொன்மைத்தாஞ்சனியைந்துமதலைக்காகாசொற்றிடுமெப்பிதாவரிட்டஞ்சொல்லு
ங்காலை, யன்மொய்த்தகுழன்மடவாயஞ்சிற்செவ்வாயடைவதுதானெனக்கருதிய
றைந்திடாயே. (௪)

சர்வாரிட்டம்.

தந்தைதாய்சகோதரமாதுலன்றாய்தாயர்தகைவில்பிதாச்சுதரென்றடைவே
வெய்யோ, னிந்துகுசன்புதன்கனகன்வெள்ளிகாரியிவர்கோணத்துறிலவர்களவ
ர்கட்காக, முந்தயனமுகூர்த்தநிசாவிருதுமாதமூவைந்துநாள்வருடமுறையேசெ
வ்விப், பைந்தொடியாய்கதிர்முதலாமரிட்டமெல்லாம்பலித்திடுங்காலங்களிவை
பகருங்காலே. (௫)

நக்ஷத்திராரிட்டம்.

மூலத்தின்முதற்காலிற்பிறத்தல்செய்யின்முன்னியவாண்டிருநான்கதளவுந்
தாதா, ஞாலத்தின்மைந்தர்முகங்காணவாகா நண்ணிரண்டுதாயருக்குநலத்தத
ன்று, சீலத்தின்மூன்றுங்கால்பொருட்குச்சேதஞ்செப்பியநான்கென்னின்மிகுசி
றப்பாமன்றி, வேலொத்தகண்மடவாய்செல்லாமூலமிகக்கொடிதீங்கிதுபோலவி
ளம்பராவே. (௬)

பூசத்துக்கடகத்துப்பிறத்தல்செய்யிற்புதல்வர்பிதாமாதர்க்குப்பொல்லாதாகும்
ஏசற்றமுதற்காலிற்பிதாவாமற்றையெனிலன்னைமூன்றுமைந்தனுன்குமாமன்
மாசற்றமரிப்புடையரத்தமூன்றில்மரித்திடுந்தாதாச்சலநாட்சாபங்கூடிற்
பேசற்றபிதாமரிக்குங்கால்களெல்லாம்பிறங்கியபூசப்படியேபேசுவாயே. (௭)

பரணியின்மூன்றுங்காலிற்பிறக்கிற்றாதாபயின்மாதாமரிப்பறுவைபயற்றிலா
தி, விரவியசால்பிதாவிரண்டு மாதாச்சாவாமென்கொடியாளுதிக்குங்காற் பூசம்
போலுங், கருதியிடுமுத்தரத்தின்முதற்காலொன்றிற்கண்ணியமாதாமரிப்புமற்று
மெல்லாம், புரையறுவேல்விழியுடையாயரிட்டமெல்லாம்புகல்நூலிற்சொன்ன
படிபோக்குவாயே. (௮)

கெண்டாந்தம் குளிகாதிதோஷம்.

உருத்ததிதிநட்சத்திரகெண்டாந்தத்திலுற்பவிக்கிற்றாய்தந்தைக்காகாவிட்
டி, பெருத்தமிடிகுளிகனிலுற்பாதகாயம்பிறங்கியமகண்டகனிற்பங்கிருத்தையெ
ன்னிற், பொருத்தவியாம் வெதிபாதத்தங்கவினம்புகல்பரிகஞ்சுதர்சாவைதிருதி
யேற்றந்தை, மரித்திடுஞ்சூலஞ்சகலநாசமந்தம்மருவியநாள்குலமனைத்தும்வாழு
மன்றே. (௯)

உற்பாதசாதம்.

கூடியசீர்மதியிழியுங்காலந்தோன்றிற்குருடாகுமங்கமிவைகுறையிலேறில்
ரேடுமிருசந்திகளிற்பறுவந்தன்னிலிருங்காலமனைத்தழிவுநிகழுமன்றிப் [டும்
பீடுறுபல்லொடுபிறப்பிற்காலாற்சாதம்பிறக்கிற்சொற்சாந்திகன்மம்பெருக்கவேண்
வீடுறுநாளஞ்சுற்றிப்பிறப்பின்மெத்தவிபரீதமாய்ப்பிறப்பின்வேந்தர்க்காகா. (௰)

அரிட்டபங்கம்.

விளங்குபெயத்தோடுசெம்பொன்கேந்திரத்துமேவினுங்கோணத்துறினுமி
குத்தநல்லோர், கிளந்தவரிட்டத்தொகைகள்முற்றுந்தாமேகெடும்புகரோன்றனை
க்குமதுகிளரேழ்நீக்கி, வளம்புனையுட்புந்தியினுலன்றிப்பொன்போல்மன்னுகினு
ஞ்சென்மத்தில்மலிந்தசோமன், றுளங்குகிலுங்கோளனைத்துந்தந்தமாட்சிதோன்
றிடினுமரிட்டமெல்லாந்தொலைந்துபோமே. (௧௧)

உச்சம்.

சூரியவோர்கோளுச்சங்குற்றம்போக்குங்கோளிரண்டேலரசாக்குங்கோள்
மூன்றுச்சம், பாரியசொற்சமூகரெனப்படுத்தும்நான்குபயில்வேள்விக்குரித்தாக்
கும்பஞ்சோச்சங்கள், சீரியவேற்பரநிருபரிறைஞ்சும்பொற்றாட்செகராசசேகரம
ன்சிங்கைதங்கு, மாரியர்கோனெனக்குடைக்கீழவனியெல்லாமடக்கியொருகோ
லோச்சவளிக்குமாதே. (௧௨)

பஞ்சாயுதம்.

நற்குழவிபிறந்தவந்நாட்கைந்தாந்நாளுநாடியவவ்வாரமுமைந்தாகுங்காலைப்,
பொற்பொலிந்தசூத்திரத்துவட்டஞ்சேர்த்துப்பொருந்திடுபஞ்சாயுதங்கள்பொறி
த்துநாபி, முற்படவேசுபமுகூர்த்தமதனில்வேதமொழிபிறங்கத்தரித்திடுகின்முன்
னோர்சொன்ன, வற்புதமாங்கிரகபயமெல்லாந்தீர்ந்தங்காயுமிகப்பெற்றுமகவழகி
தாமே. (௧௩)

காப்புத்தரித்தல்.

சாதமுறுந்திவசத்துக்கேழாநாளிற்றக்கபகலேகுழவிதனக்குச்சால
வேதமுறுநமனுலென்றறிந்தக்காலத்திருக்காப்புத்தரித்ததற்பினந்திநேரம்
ஓதுமறைவிளங்கவருகணேசனுக்கன்புறுபூசைபுரிந்துமணிமுசலமேந்தித்
தீதறுசீப்பிடுங்கதவிற்புடைக்கநன்மைதிகழ்ந்தமகவுய்யுமெனத்தேருவாயே. ௧௪

நாமகரணம்.

வேதியர்க்குச்சென்மாதியீராறுதல்விளங்கியவீரைந்தாதல்வேந்தர்க்கீரா
றோதியவீரெட்டாதல்வைசியர்க்குநாலைந்துடனிருபத்திரண்டாதல்சூத்திரர்க்குப்
பேதமிலாறைந்தாதல்நாலெட்டாதல்பெறுநாளிற்சுபமுகூர்த்தம்பிறங்கநற்கோ
டிலராயுச்சமவையடைந்துநன்றாய்ச்செப்பியநன்னுமகன்மஞ்செய்திடாயே. ()

பேசியதற்காலமதில்வாரமாதிபிறங்கியசாமானியமாமெனினுநன்று [ட்டம்
மாசறுநன்முகூர்த்தமொன்றேயமையுமந்நாளவைகழிந்தா லனுஷமகங்கரும்பவி
பூசமதியுத்தரமூன்றனிலநவ்விபேரோணநற்சகடுதோணியீசன் [கொள்ளே.
காசறுமிந்நாட்களின்மால் செம்பொன்றிங்கள்கவிவாரோத யாம்மிசங்கள்கண்டு

பக்கமதிலாறெட்டோன்கீராறுபன்னுன்கொன்பான்பர்வமிரண்டுநன்றன்
றொக்குமிராசியிற்றிரமேநன்றாமற்றவுபயமுமாமொழிந்தசாமொன்றுமாகா
தக்கவர்கடிரிகோணகண்டந்தன்னிற்சாரவவரோரைபெறவெட்டேசுத்த
மிக்கமுதற்பகன்மத்தியானத்துள்ளேவேண்டுமதிநுதன்மருங்குன் மின்னனே.

துத்தபானம்.

சென்மாதிமுப்பத்தொன்றமைந்தநாளிற்றிகழிரண்டாஞ்சன்மத்தில்நுகூலித்த, பொன்மாலோன்வெள்ளிநிறைமதியின்னேக்குப்பொருந்துதயந்திருந்துசுபமுகூர்த்தத்தங்க, ணன்மாசிலவனியுடன்மதிக்குப்பூசைநல்கிப்பாலூட்டிவைக்கநன்றேயாமிக், கன்மமதற்குரைத்தநாட்கழிந்தாலூட்டுக்கல்யாணவிதிப்படியேகருதிச்செய்யே. (௧௮)

தொட்டிலேற்றல்.

சாதமுதற்பதினாறிற்பத்திராறிற்சாற்றியநாலெட்டினின்மேனேக்கதாக
வோதியநாளதனிலன்றிச்சரநாள்தன்னிலூர்த்துவசரராசியையநுகூலிக்க
வேதமறுசுபதிதியிற்சுபர்வாரத்தெழுசுபர்களவர்நோக்குண்டாகவோரை
தீதிலதாப்பொற்கால்கள்சிறக்கத்தொட்டிற்சிசுக்களையேற்றுதற்குநன்று திருவன்ருயே.

கர்னவேதனம்.

ஈரெட்டிலாறிரண்டாநாளின்மாதமிருமூன்றிலிருநான்கிலேழினல்ல
பேருற்றமாதங்கள்சம்பவிக்கப்பிறைவளரும்பக்கத்துப்பகன்முற்பத்தி
னேருற்றவிருபதினுட்டிதியுநாளுநிறைந்துலவச்சுபர்பெலமுண்டாகநாட்டிக்
காருற்றவிரவுடனேராசிசந்திகழித்துணர்ந்துமக்களுக்குக்காதுகுத்தே. (௨௦)

ஓணமிரேவதிசெங்கைகரும்பூச மூத்தரமூன்றுதிபனையவிட்ட மும்மீன், பாணியுடன்சித்திரையிந்நாளிற்கும்பம்பயிலரிதேளொழித்தோரையெழமாறிங்கள், சேணவிர்பொன்வெள்ளியிவர்வாரஞ்சாரத்திருந்துமிவர்லக்கினத்துத்திகழப்பக்கம், வாணுதலாயுவாவிருத்தைதள்ளியெட்டாய்வருமிடமுஞ்சுத்தமுறவணங்கிக்கொள்ளே. (௨௧)

ஆதித்திய சந்திர கோ தரிசனம்.

நாட்டியநற்றிங்களொருமூன்றிற்சென்மநாளாதல்வாரமுதலெல்லாநல்லோ
ரூட்டுதற்குச்சொன்னபடியதனிலாதலுறுமுகூர்த்தத்திரவிதரிசனமுநாலாங்
கோட்டமறுதிங்களினிலன்னத்திற்குக்குறித்தபடிநாளாதிகொண்டுதிங்கட்
பூட்டியகோதரிசனமும்பண்ணனன்றுபொருவிலியகலசமுலைப்பொன்னனுளே.

அன்னப்பிராசனம்.

திங்களிருமூன்றிலிருநான்கிற்பத்திற் றிறம்பெறுமாண்டொன்றதனிலூட்டிற்காகு, மங்கதனிலூற்றெண்பதன்றினன்னூற்றைம்பதெனவாகுநாட்கழியல்வேண்டுந், தங்கியவாண்பிள்ளைக்குமாதப்பான்மைசாற்றிரட்டியாமறுவில்பெண்ணுக்கென்னில், மங்கலமாமொற்றிக்கிலொன்பான்மாதமன்னியவாண்பிள்ளைக்குமதிக்கலாமே. (௨௩)

கரும்புகுருமதியவிட்டம் விளக்குச்செக்குக் கன்னியயம்போந்தைசகடோணந்தோணி, திரும்புகுருகவிருமுறம்வாய்க்காலோடுசித்திரையுத்தரங்களெனச்சிறந்தநாளில், வரும்புதன்பொன்வெள்ளிசசிவாரங்கால்களுவாபக்கச்சித்திரைகடள்ளியெட்டு, விரும்புகுசன்மும்மூன்றின்மாலேழ்வெள்ளி மேடந்தேண்மீனமிவைவிலக்குவாயே. (௨௪)

ஆண்டுநிறைவு.

வளர்ந்தசீர்மகவினுக்குச்சௌரமாதவகையாலீராறுதிங்கட்கழிந்துமற்றை, விளங்கியவாண்டினிற் சென்மமாதநாளில் வேண்டுசுபராசிகடா மனுகூலிக்கத், துளங்கியநன்னீராட்டிச்சாந்தி பண்ணித்தூயநவாம்பரமரையிற்றொடுத்துச்செம்பொன், களங்கமறவமைத்தகடிசூத்திரத்தைக் கட்டிமனமகிழ்ந்திருக்கக் கழறுவாயே. (௨௫)

சௌளம்.

ஆண்டொன்றிலந்தத்தின்மூன்றிலந்தினாகியமுக்கூற்றின்மேலாகுஞ்சௌளம், வேண்டியபெண்மகவினுக்கேழைந்தாமன்றிவிளங்கியவைந்திரட்டித்தவருடமெல்லாங், காண்டகுமாடவர்க்காகுஞ்செம்பொனோடுகவியிவைகளத்தமியாக் காலந்தன்னி, லீண்டியவுத்தராயணத்துக்காலநன்றாயிருந்திடச்சௌளச்சடங்குக்கியம்புவாயே. (௨௬)

• புனிதமதியவிட்டமுடனோணந்தோணிபுரவிகுருசித்திரையுங்கரமின்னாட்களினியனதேருத்தரங்கள் விளக்குச்செக்கோடிவையுரைக்கின் மத்திமமோராறெட்டு,வினவியநான்கேழுமூன்றொன்றுவிளம்பாதநாள்களிவைவேண்டாந்திங்கள், கனவியபொன்வெள்ளிபுந்திநல்வாராதி கருதுவெள்ளிசாவபனங்கண்ணாதென்னே. (௨௭)

குளிர்மடவாடண்டுதுலைசுறாமீனேறுகூறிடிலுத்தமமாகுஞ்சிங்கமாடு, வளைதனுத்தேளிவைபொல்லாக்கோளினற்கோண் மன்னிலவர்நோக்குறிலாங்கும்பநல்லோ, ரளவில்பெலமுண்டெனினுந்தீயதாகுமட்டமத்தில்வெள்ளியொழிந்தாகார்மற்றோ, ரொளியிரவிசேய்பளிங்குசனியேழ்நன்றென் றுரைத்தவிதிலதோவபனமொன்றனன்றே. (௨௮)

சௌரம், கருப்ப ஸ்திரீபுருஷருக் காகாதகாலமும் மற்றையோர்க் காகுங்காலமும்.

ஆதானமுதற்சாதமந்தமாகவன்னைபிதாவிருவருக்கும்விலக்கலாகுஞ்
சூதார்ந்தமுலையாருக்கீரைந்தாகுஞ்சொல்லிடிலாடவர்தமக்குமூவைந்தாமற்
றோதாதவலியவர்க்குத்தினமாங்கெற்பமுறிலன்னைசிசுக்கடனக்கோதார்சந்தி
மாதாந்தநிசி சூதபகாலமெண்ணெய் வருமுணவு பிணிபொருந்தின் மன்னாதென்
[னே.

பல்லுகிர் மயிர்வினைக்கு விசேடகாலம்.

மறையவருக்கிரவிசெவ்வாய்மன்னர்க்கிந்து மங்கையர்க்குச்சூத்திரர்க்குமந்தன்றந்தங், கறையகற்றவுகிர்சத்திபண்ணநன்றாங் காவல்விடிலுபதேசங்கருதினல்ல, நிறைமகுடஞ்சூடியுறு பூசைபண்ணில் நியமமுறுவிரதத்திற் சூதகத்தி, விறையவர்பூசுரருறையினுள்வாராதியேதெனுமாங்கடிவினைக்குமிவ்வாறாமே. (௩0)

மனைவி கருப்பவதியானாற் செய்யத்தகாதவை.

நகமறுத்தல்கடலாடல் சிராத்தமுண்டல் நண்ணுசவத்தின்பிறகேநடத்தல் மேவு, மகமெடுத்தலதற்கானகருமஞ்செய்தலமுகல்பிறிதொருமணமுண்டாக்கலன்றிப், புகல்மிகுத்தநெடுந்தூரம் போகன்மேனிபொருந்துமயிர் வினைகேசம் போக்கலெல்லாம், மகிழ்வுறத்தன்மனையாள் சூல்சாரிற்செய்யவழக்கலவாயுளுங்குறுகவருமென்றாரே. (௩௧)

சௌரம், இன்னகாலத்திற் செய்யிற் றீங்குவருமென்பது.

மகமைந்துமூன்றனுஷமுருடேரெட்டுவன்னியிருமூன்றொருநான்குத்தரத்து, தகைமைபெறுமயிராகற்றிலாண்டுநான்கிற்சார்ந்திடுநோயாயுசவுஞ்சமிக்குமன்றி, நிகரில்புரட்டாசியொடுமாடி மாசி நிகழ்த்துறுமார்கழியிவையினினைக்கலாகா, வகவிழியாய்செயிற்பிதிர்களுரோமமெல்லாங் கைப்பற்றிநுகர்வரெனக்கணிப்பர்தாமே. (கஉ)

மாதபலம்.

சித்திரைகைப்பொருள்வென்றிமிகும்வைகாசி திகழானிகுலம்பெருகுமாடிநோயாம், மெத்தகிளைக்காகாவாவணிபொல்லாங்குவிளைத்திடுமெப்புரட்டாதிதனக்கேயாகா, புத்திரக்கேடைப்பசியில்வெந்துநாசம்பொருந்துமேழ்தனச்சிதைவாம் மார்கழிதைநன்றாஞ் சுத்தமறுசஞ்சலமாமாசிநன்மை சுரந்திடுபங்குனிவபனஞ்சொல்லுங்காலே. (கங)

கார்த்திகைவிளக்கு.

சொல்லியவாண்டோரைந்தில்மூன்றுதன்னிற் றுடங்கியதேள்மாதத்தைம்மூன்றாம்பக்கத், தெல்லியனல்லுறவோரைய னுகூலிக்கவிளங்குமரர்க்கருந்தீபமெடுக்கலாகு, மல்லதிருபக்கமுன்பின்னுளுடனேபறுவமனைமர்துறுகின்மத்திமமாம்பறுவமின்றே, னல்லதன்றாமரசர்மனைசிவாலயத்துநவின்றனரேறெழவிளக்குநலத்ததன்றே. (கச)

கிருத்திகாதீபத்திற் செய்யத்தகுவன.

வேறு.

புகருறுதீமைசாரினுந்திறுதிபொருந்தியசுபமதின்றெனினும்
வகையுறுகுற்றம்பிறபலவரினுமன்னுதீபோற்சவகாலத்
துகள்கயல்விழியாய்கடிவினைசாலையுட்புகலாதியாயுரைத்த
தகுசுபமெவையும்பண்ணலாமென்றுசாற்றினர்முனிவரர்தாமே. (கரு)

யாத்திராவிறுதம்.

சாபமெழுகாலத்துக்கதிரோனுகச்சசிநிறைந்துபக்கதியாழ்சம்பவிக்கத்
தூபமுறுங்குழலார்க்குத்தனுமானேரைதோன்றநறுநீராடல்சொற்றார்கற்றோர்
கோபமறுமனுகூலமுகூர்த்தத்தூசல்கொண்டாட்டநன்றுரைத்தபக்கமின்றிப்
பாபமறுநாளொன்றில்நடுவாமன்றேற்பயிலாதுபறுவமுறிற்பழிப்பதாமே. (கசு)

வித்தியாரம்பம்.

வேறு.

ஐந்தாறுமாண்டதனின்நெடுங்கதிர்சேர் வெய்யோனமைந்துறவுத்தராயணகாலத்தமையுங்கும்ப, மூந்துறநீத்தல்லாதமாதந்தன்னில்முதற்பக்கத்திரவகற்றிப்பகற்காலத்துத், தந்திமுகற்கெட்பயறோதனஞ்செய்பாறேன்சருக்கரைநைவேதித்துவணங்கிவாழ்த்தி. மைந்தர்களுக்கமைந்தமுதலெழுத்தாரம்பமருவுவித்துக்குருசித்தமகிழ்விப்பாயே. (கஎ)

வேதாரம்பம்.

அத்தமைப்பசிபனைவிளக்கரியரனுறைதருமான்றலைபூசம்
வைத்தசித்திரைபுனர்தமென்றின்னவைமதித்திடிலுத்தமமுருடே
ருத்தரங்கண்மூன்றிரேவதிமத்திமமுவாவிரண்டட்டமியிருத்தை
கைத்தலசத்தமியொடுபதின்மூன்றிவைகழிவெனக்கணங்குழைகாணே. (௫௩)

புந்திவெள்ளிபொன்வாரங்களாதிகள்புகன்றிடிலுத்தமமிரவி
சந்திரன்பெறுவாரமதாதிகள்சாற்றிடில்மத்திமந்தானு
நந்தலின்றியவிராசியிலுபயங்கணன்றுமத்திமஞ்சரராசி
வந்தசுத்திபேழுறமறையங்கமுமறைகளும்பயில்வதுவழக்கே. (௫௪)

வேதாங்கமிவையென்பது.

சந்தசாத்திரங்காணுசிசாற்றியசிட்சையேநாட்ட
முந்துசோதிடமாய்ச்சொற்றமுதுமொழிப்பனுவல்கண்ணம்
புந்திசெய்நிருத்தங்கற்பம்புன்மையானனமுன்பெற்ற
வந்தமில்சத்தநூலிவ்வாறும்வேதாங்கமாமால்; (௫௫)

அநத்தியயனம்.

வேறு.

ஆகுமைப்பசிசித்திரைப்பிறப்பினையறிந்தவர்விஷுவெனவறைவர்
ஏகுமவ்விஷுமுன்பினுங்கடிகைகளெண்ணிரண்டவையிரண்டயனப்
பாகுபட்டதையாடியிப்பிறப்பினிற்பயின்முன்பினுலைந்துகடிகை
தோகையட்டமியுவாக்களுஞ்சந்தியுந்தொன்மறையோதுகிற்றுகளே. (௫௬)

ஒன்றுமேழிருபக்கமுந்திரயோதசியுடனுறுநிசிமுகமும்
அன்றிவாணகமுழங்கியகாலமுமழலிடிவிழுந்தவப்பொழுதும்
நன்றலாதவுற்பாதமாநாளினுநற்குருயோகிகளரசர்
பொன்றுநாளினும்வேதவேதாங்கங்கள்புகன்றிடாரறிந்தவர்பொன்னே. (௫௭)

மைந்தர்வினைப்படலம் முற்றிற்று.

மூன்றாவது

மணவினைப்படலம்.

முறையினேசியமணவினைசெயினதன்முன்பதாய்மறைபுகல்விரதம்
குறைவதின்றியேசெய்வதுவிதியெனக்குலவலாற்சதுர்விதவிரதம்
நிறைவதாகவேயமைந்தபின்பூசுரர்நிகரில்கோவதுபேக்கி
விறையில்சுத்தனுமிதற்குநாளாதிகளியம்பியமயிர்வினையிடத்தே. (௧)

சமாவர்த்தனம்.

வேறு.

சூலமோணமூருடேர்கரும்புமதிசுரர்குருச்சனிறுசொற்றநற்
றூலமேவுதிர்யுத்தரங்களிவைதம்மில்வெள்ளிகுருவாதவன்
மாலவன்சசியிவ்வாரமாதியில்மதித்தவட்டமியுவாக்களோ
டேலவொன்றுடனிருத்தைதள்ளிமுதலிருபதிற்பகலிசைந்திடே. (௨)

கத்துமேறுதுலைஞெண்டுமீனமொடுகன்னிகும்பமுனிதண்டுமான்
சுத்தமாம்வைகடம்மில்மேடமரிதுய்யதேளிவைகடள்ளியே
நத்தமானமதுவன்றியெட்டிடமமைந்தசுத்திபெறநற்சமா
வர்த்தமாவதுபுரிந்துகொள்கநெடுவானநின்மலமதிக்கவே. (௩)

சூத்திரசமாவர்த்தனம்.

ஓதுசூத்திரர்தமக்குமிவ்விதியுரைப்பினற்றிவசமுற்றதிற்
பேதமற்றகடிமுன்புதூயதுபிறங்குநல்லறலின்மூழ்கியே
யேதமற்றவிருகோடிசுற்றிவசியேந்தியேகியெழுசூரியன்
றீதின்மெய்ப்பரவுகாளிபூசையதுசெய்வதென்றுரைசெய்தேனனாய். (௪)

விவாகசம்பிரதாயமுதலியன.

மாதர்மைந்தரிவர்சம்பிரதாயமும்வரும்பொருத்தமுநிமித்தமு
மோதுகோசரமுமொன்றநன்மணமதுறுதனன்றெனவிசைத்தலால்
சேதுகாவலன்விஞ்சைவிஞ்சுசெகராசசேகரன்மெய்திகழ்வதற்
கேதுவானவருமலர்முகத்தெரிவையிவ்விதிப்படியிசைத்திடே. (௫)

தசப்பொருத்த அனுகூலவிதி.

தினங்கணந்தருமகேந்திரந்திரிகடீர்க்கம்யோனியதிராசியும்
மனங்கொளேரையதிபதிபொருத்தமுறுவசியம்ரச்சுவொடுவேதையென்
றினங்கொள்பத்துமனுகூலமாமுழுதுமென்னினன்மைபலவோங்குமால்
கனங்கொள்பாதியெனின்மத்திமந்திகள்கனங்குழாய்குறையினதமமே. (௬)

தினப்பொருத்தம்.

குலவுமங்கையர்களுள்களாதியணிகுமாரனுளவுமெண்ணியே
யிலகுமூன்றுபரியாயமாகிவரவெண்ணியொன்றினொடுமூன்றுமைந்
துலவுமேழுபரியாயமொன்றினிலொழிக்கமற்றதிலுரைத்தகா
லலதுநன்றறைவைநாசநாளொழியவாகுமற்றதிலறைந்ததே. (௭)

ஒன்றுசென்மமதிரண்டுசம்பதுவிபத்துமூன்றுசேமநான்கதாம்
நன்றியைந்ததுபிரத்தியம்பகரினண்ணுமாறுபெறுசாதக
மன்றியேழுவதமெட்டுமித்திரமதாகுமப்பாமமித்திரந்
துன்றுமொன்பதுசிறந்தபத்துரைசெய்தூயசென்மமெனமங்கையே. (௮)

சென்மாதிபலம்.

சென்மநோய்விபத்துநாசமாம்பதிசிறப்பிலைபகர்பிரத்தியயம்
கன்மவீவுவதமொன்றுநான்குதிரிகால்கடள்ளினினைமூன்றினு
நன்மைசாருமொழிபிறவெலாமிகவுநன்றெனச்சதுர்மறைப்பொருட்
டொன்மைகண்டவர்கள்சொன்னதாமிதுதுணிந்துநீயுரைசெய்தோகையே. (௯)

ஏகதின விவாகம்.

அடுப்புநீர்கரமதிந்திரன்சதயமரவிஞுட்பதிமடந்தையர்க்
கெடுத்தவொன்றதெனினன்றுசாலுமிவையெண்ணிலாமகமவிட்டநற்
பிடித்தபிண்டிகுருமூலமாதிரைகள்பேசிலொன்றதுறின்மத்திமந்
தடுத்தநாளொருபதைந்திலேகமதுசாரினன்மைகள்சமிக்குமே. (க0)

ஏகராசி விவாகம்.

குமரன்மங்கையிவர்தங்களோரைகள்குறித்தவொன்றதெனின்முன்னதி
னமருநாளிறைவனுளதாகிலழகரிவைநாளெனிலமங்கலஞ்
சமையுமோரைகளிரண்டுமொன்றின்மிசைசாரின்முன்பதியிராசியே
லுமையுநன்சிவனுமென்னவாமொழிகவோரைநாளுமுடனுென்றினே. (கக)

கணம்.

பூசமோணமநுஷங்கரம்புரவிபுநர்தமிந்தனிலமந்தநா
ளேசிறெய்வகணமரவமூலமுறமிந்திரன்வருணனங்கிபுள்
மாசிசித்திரையிராக்கதக்கணமதித்தபூதமுருடேர்விளங்
கீசன்மூன்றுபெறுபூரமுத்தரமிசைத்தமானுடகணங்களே. (கஉ)

இருவர்தங்கணமுமொன்றியேவிடினிசைந்தவுத்தமமதும்பர்தம்
விரவுநற்கணமுமானுடக்கணமுமேவின்மத்திமமரக்கராய்
மருவுமக்கணமுமும்பர்தங்கணமுமன்னுமேலதமமனுடனு
மரியவக்கணமுநிசிசரக்கணமுமாகின்மெத்ததமமாகுமே. (கங)

ஏய்ந்தமங்கையர்கள்நிசிசரக்கணமெனிற்சிறந்ததலமைந்தர்தம்
வாய்ந்ததங்கணமிராக்கதக்கணம்வரிற்பொருத்தநலதன்றியே
தோய்ந்தமங்கையர்கணிசிசரற்குரியசொற்கணம்பெறினுநல்லவாம்
வேந்தனுளதறுநான்கின்மேலெனின்விதித்தநான்மறைவிதித்ததே. கச

மாகேந்திரம்.

வேறு.

பிறைநுதன்மாமடமாதர் சென்மமாகப்பிறங்கிய நாளதனுக்குநான்கேழை
யைந், தறைபதிறுறையிரண்டுதிகழ்மூவொன்பா னுமிருபத்திரண்டுபன்மூன்ற
ணிபத்தோன்பா, னிறையவனுளாகின்மகேந்திரமுண்டென்றுமிவையொழிந்த
வெண்ணின்மகேந்திரமின்றென்று, மறையொருநான்கறிந்துணர்ந்தோர்கண்டா
ர்செவ்விமதிவதனக்கிஞ்சுகவாய்மடநல்லாயே. (கரு)

ஸ்திரீ தீர்க்கம்.

சிறந்தமதித்திருவதனச்செவ்விநவ்விச் சிஞ்சிதப்பூண்மகுடமுலைத்தே
னுர்கள், பிறங்கியநற்சென்மநாண்முதலாய்த்தாமப்பெருஞ்சிகரக்களப்பு
யப்பெம்மான்சென்ம, மறந்தருநாளளவாகக்குணிக்கிற்பன்மூன்றதற்குமே
ற்றிரிதீர்க்கநன்றுமன்றி, நிறைந்தவொன்பான்மேலாகினடுவாங்கீழாய்நிற்
பிற்றிரிதீர்க்கமிலைநிகழ்த்துங்காலே. (கசு)

யோனி.

மாக்களிறுமறியுடனுணரவநாகம்வருஞமலிமார்ச்சாலந்தகர்வெருகுசி கரி, யாக்கியபெண்ணெலியெருதுமேதிபலிப்போத்தாமடர்தருபெண்புலி யுடன்மான்கலைமுடுவெல்குரங்கு, நீக்கியமைம்மைப்பசுவேமந்திபிணுச்சிங்க நிசழ்பெட்டைப்பரியினுடனெடுமடங்கல்சுரபி, தூக்கியகைக்கரேணுவெ னப்பரிமுதலாயோனிசொற்றனர்நற்சோதிடநூல்கற்றபெரியோரே. (கஎ)

மடவரலாடவர்களாமிருவோருக்குமன்னியவொன்றுகினன்றுபின்ன யோனி, நடுவைரமெனிலதமமாகுமிதுநவிலுங்காற்பசுபுலிதோல்சிங்கம்வா சி, யடுமகிடமாடுகவி பூனையரகுவரிணநாயா மிவைகளினைத்தூசிச்சொற், படியிடத்தாடவர்மடவாரிவாகண்மன்னர் பயின்றுழிலோர்க்குப்பொருந்தப் பார்த்துக்கொள்ளே. (கஅ)

இராசி.

மதிமுகத்தாரோரைமுதல்மைந்தரோரைவரவெண்ணுந்தொகைமிகு ந்துமைந்தர்தங்கள், புதுமையுற்றவோரைமுதல்மடவாரோரைபுகவெண் ணுந்தொகைகுறைந்துவருகிலோரை, முதுமைபெற்றவனுகூலநன்றுமெ ன்றுமொழிந்தனர்களிருதொகையுஞ் சமமேயாகிற், கதுமையுற்றோர்நன் றெனவேகண்டார்செம்பொற்கனங்குழையாயிவ்விதியுங்கருதுவாயே. ()

இராசியதிபதி.

தரணிமகன்வெள்ளிபுதனிந்துவெய்யோன்சசிபுதல்வன்கவிசேய்பொ ன்மந்தன்காரி, குருவெனமேடாதியதிபதியாமென்றேகுறித்தனர்நற்சோதி டநூல்குறித்தநல்லோர், பரிமுதலாங்காருடங்கியொருநூற்றெட்டாம்பத ங்களுமிவ்வாறின்மைபகர்மின்செவ்விக், கருநெடுங்கட்சிஞ்சிதப்பூணிணைப் பொற்கொங்கைக்கமழளகப்பவளவிதழ்க்கனிவாய்மாதே. (உ0)

சத்துரு மித்துரு உதாசினம்.

வெய்யவற்குச்சனிவெள்ளிபகைவர்புந்திவிளம்புசமனொழிந்தோர்மித் திரராந்திங்கட், கையமறுசதிரவன்மாறேழரல்லாரறைசமர்சேய்க்காதப ன்பொன்றிங்களன்போர், துய்யபுதன்பகைவனல்லோர்சமராமாற்குச்சூரி யன்காவியன்சிறந்தோர்பகைஞன்றிங்கள், பொய்யிலொழிந்தோர்சமரந்த ணற்குவெய்யோன்புகர்மாலாகார்மந்தன்சமனுய்ப்போக்கே. (உக)

அல்லார்மித்திரராகுமரும்புகருக்கந்தணனல்லவனிமைந்தன்
சொல்லாய்சமரிரவிமைந்தன்மால்மித்திரராந்துலங்குமற்றோர்
பொல்லாதபகைவர்சனிக்கிந்துமகன்புகர்சிறந்தோர்சமனுஞ்செம்பொ
னல்லார்களவரொழிந்தாரெனமொழிந்தார்வதனமதியனவேலாய். (உஉ)

அவரவர்பாதந்திரிகோணவகந்தொடங்கியாட்சியளவடைவேயெண்ணிற்
கவையுறுமொன்றிரண்டைந்துமும்மூன்றீராறெட்டுக்கருதுநான்கென்
றிவைபெறினுமுச்சமதாயினுமித்திரராமீதில்லாவெண்ணேல்
நவையுறுவெம்பகைசமருமிவ்வகையேகுறித்தறிந்துநவிலுவாயே. (உ௩)

தற்கால சத்துரு மித்துரு உதாசீனம் அறிய.

தற்காலமித்திராம்பதினொன்றினொன்கிலேந்திற்சாரும்பத்திற்
சொற்காகுமிரண்டாறிலொருமூன்றிலிரண்டிலரிசொல்லுங்காலை
நிற்பாகுமாறேழெட்டொன்ஞென்பான்வான்பகைஞர்நிகர்பொன் வெள்ளி
யற்காலமதிபுந்திகதிர்மந்தன்சேய்சனியென்றறிவாயன்றே. (உ௪)

கூட்டிருவோரைகளுக்கதிபர்வெகுமித்திரரேற்குணமாமன்றி
நாட்டியமித்திரர்சமரேனடுவதமஞ்சமராகினயந்தோர்தாமு
மீட்டியவெம்பகைஞருமேற்சண்டைசமசத்துருவேலிறத்தல்பொல்லா
வோட்டியவான்பகைஞரெனின்மரணமெனக்கவிஞரறிந்துரைத்தவாறே.

வசியம்.

தகர்க்குத்தேளரிநண்டுதலையேற்றுக்கரிவையதுதடிக்குச்சாப [ன்
மிகைக்குந்தேணண்டினுக்குத் துலையரிக்குத்தண்டுகயல் மின்னுக்கெண்மா
மகட்பெயர்கோலுக்குக்கழிக்குத்துலைகடகமீன்சிலைக்குவருடைகும்ப[லே.
மிகட்பில்கலைக்காடுகுடத்துக்குக்கொண்டையரிணமதுமீனத்துக்கியம்புங்கா

இரச்சு.

நல்லிலிங்காகிருதிமூன்றுபொறித்துமீதுநான்குவரைநீட்டிக்கீழிடவந்தத்துப், புல்லியகோட்டத்திரலையைப்படுத்துநாவாய்புகுமளவும்வலமாகப்பொருத்திற்றோர்ந்தோர், சொல்லியரச்சுச்சக்கரமாமிருவர்நாளுந்துலங்கியகீரொன்றுகிலாகாவேறின், மெல்லியலாய்சோபனமாமிறங்கிற்றீதாமேல்கீழ்நோக்குறிலிரச்சுமிகவுநன்றே. (உஎ)

ஏகரேகாரச்சுபலம்.

வேறு.

ப்தத்துறுவரையிலொன்றிடிற்றணப்பாம்பயிலியலூருவிலொன்றிற்
றிதப்படுதனக்கேடரைவயினொன்றிற்சிறப்புடைமகச்சிதைவாகு
மதிப்புறுகழுத்துவரையிடையொன்றின்மன்னியகாந்தனுக்கழிவு
கதித்தலச்சிரத்தினொன்றிடின்மரிப்பர்காந்தனுங்கன்னியுங்காணே. (உஅ)

வேதை.

ஆதியுமொளியும்பூதமும்பனையுமறைதருமாரலுமுறமும்
வேதனும்விளக்குமீசனுமாலும்புரர்தமும்விச்சுவநாளும்
ஓதியகுருவுமுரைசெய்நீர்நாளுமுரகமுமூலமுமகமுந்
தீதறுதொழுவும்பூரமுமுரசுஞ்செப்பியவிவையுடன்றிருவே. (உகூ)

உற்றபங்குனிநற்புரட்டாதியும்பகரத்தமுஞ்செக்குஞ்
சற்றலவேதையொன்றினுக்கொன்றுதண்மதிசித்திரையவிட்டம்
பெற்றவிம்மூன்றுமப்படித்தலைதோள்பேணியவயிறதுதுடைதா
ளெற்றிடுவேதைமகன்மகள்புதல்வரிருங்கிளைதனஞ்சிதைந்திடுமே. (௩0)

பொருத்தங்களின் அநுகூலம்.

ஆயுசுதினமாங்கணஞ்சுபம்யோனியன்புமாகேந்திரம்பிள்ளை
யேயநற்றீர்க்கநலங்கிளரோரையிருங்குலவர்த்தனைய்திமை
தூயமித்திராஞ்சந்துட்டிவசியம்சொற்றிடிவிரச்சுமங்கிலியங்
காயுமதின்மைவேதையென்றிவைக்குக்கணங்குழாய்பலன்களையறியே. ()

வன்னகூடம்.

மீனமுந்தேளுங்கடகமுமுரைக்கில்விப்பிரசாதிகோல்சிங்கங்
கூனுவின்மன்னரரியதண்டாடுகும்பமற்றவர்கலைமங்கை
யானவேறிவையாஞ்சூத்திரசாதியடைந்திடின்மாதர்கடாழ்ந்தே
மானமாபுருடருயர்ந்திடவேண்டும்வன்னகூடத்தினின்மானே. (௧௨)

நாடிகூடம்.

இடையதுமுதலாநாடிகளென்னவியம்பியமூவரையிட்டு
நடையுறுபரிநாட்கிழக்குமுன்னாகநாட்டியேயடைவினிலெண்ணின்
மடவரனுளுமிறையவனுளுமதித்தொருநாடியிலாகா
தடமுலைமடவாய்நாடிகூடத்திற்றனித்தனிவரிற்சுபந்தருமே. (௧௩)

பூதகூடம்.

அஞ்சிருமூன்றுமஞ்சிருமூன்றுமஞ்சுநாட்பரிமுதலாக
விஞ்சுபார்நீர்தீவளிவெளியென்னவிளம்பியவடைவினிற்கண்டால்
மஞ்சுநேர்குழற்கும்வரற்குமோர்பூதமன்னுகினல்லதாந்தீநீ
ரெஞ்சியவதமமொழிந்தவைசமமென்றியம்பினர்பூதத்தினியல்பே. (௧௪)

அநுகூலதேசம்.

வேறு.

வேதைசௌராட்டிரதேசம்விளம்பியகலிங்கற்காகு
மோதியவிரச்சுமற்றவுற்றிடுவசியமோரிற்
கோதில்கொங்கணத்திற்காகுங்குயின்மொழிமடவாயோனி
யேதமிலிராசிஞாலமெங்கணுமாகுமன்றே. (௧௫)

பொருத்ததோஷாபவாதம்.

வேறு.

எண்டிருத்துமிரண்டீராறிருமூன்றெட்டைந்தொன்பானிராசியாயும்
பண்டிகைக்குமொழிக்கரக்கர்கணங்கூடுகினும்பயில்கிரகநட்பதுண்டேல்
தெண்டிரைக்குட்கண்டுயில்மால்செகராசசேகரனுந்திருவுமென்ன
மண்டலத்தினெடுங்காலமடமானும்புமானுமிகவாழ்வரன்றே. (௧௬)

சித்தமுறுதினமாதிதிதெனினுமிருகூடஞ்சிதைவுற்றாலும்
சுத்தவிருவோரோரைக்கதிபதியோர்கிரகமாகித்தோன்றிலான்ற
முத்தமிழ்தேர்செகராசசேகரமன்றிருமார்பின்முன்னூலென்ன
மெத்துமியன்மயிலனையார்பைங்கழுத்தின்மங்கலநாண்விளங்குமின்னே. ()

ஒருவயிற்றிற் பிறந்தோர்க்குக் காலவர்ச்சிதம்.

வேறு.

என்றவோரன்னைமைந்தரிருவருக்கொருதினத்தி
லான்றவோர்மாதத்தங்கணயனமொன்றதனிற்சோதி
கான்றவேல்விழியாய்சௌளங்கடிவினைநாலிம்மூன்றுஞ்
சான்றவராகாதென்றுசாற்றினார்செயற்குத்தானே. (௧௮)

விவாகத்துக்கேதுவானகாலம்.

கடிவினைக்கிரட்டியாண்டுகன்னியர்க்கழகாஞ்சாலப்
படியினிற்குமாற்கொற்றைபலிக்குமாயுசுவும்வாழ்வுந்
தொடிபடுகரத்தாய்வேறுதோன்றிடிற்றீதாமென்று
நெடுமறைகிளர்ந்தநூலோர்நிகழ்த்தினரெனக்கொணீயே. (௩௯)

விவாகமாதம்.

வேறு.

என்றவன்கடகங்குட்டந்தனுக்கன்னியிவையொழியோரையினிற்கும்
நன்றிசேர்மாதமவைகளிஞசநாயகன்புரோகிதன்வெள்ளி
பொன்றுதல்விருத்தவாலபாவங்கள்பொருந்தியகாலங்கள்போக்கி
யொன்றியபக்கமுதலினிற்றிங்கள்பலம்பெறநன்மணமுன்னே. (௪0)

சேட்டபுத்திரருக்காகாத மாதம்.

பின்னுமக்கடிக்குப்பேசுவர்தலைக்குற்பிள்ளைகட்கானியுமாகா
சென்மமாமாதந்தவிர்தலுமாகுந்திதிகளிலட்டமியிருத்தை
மன்னியசட்டிதுவாதசிபர்வம்வருமிரண்டொழிசெனனல்லோர்
பன்னினருவாவிற்பூரணைகடிக்குப்பழிப்பிலையென்பதுபகரே. (௪௧)

விவாகத்துக்கு ஆகும்நாளும் ஆகாவாரமும்.

அன்றிலுத்தரங்கடோணிநற்பமத்தமிந்தனுஷநீள்வாய்க்கா
லெ ன்றியவுருடோாயவனுளிலுறுகதிர்சனிகுசன்வார
மின்றியிவ்வோர்களுதயவங்கிஷங்களியம்பியநோக்கிவையொழிந்து
மன்றலங்குழலாய்கடிபுரிமந்தன்வாரமுமாமெனமதியே. (௪௨)

விவாகலக்கினமும் கிரகங்கள் நிற்குமிடமும்.

காரிகையிரட்டைதுலையிவைநன்றுகரிசிலைகுடங்குளிரேறு
சீரியசியமெனுமிவைகோளிற்சிறந்தவருதயத்தினுங்கி
லோரிரண்டுடனேயஞ்சினிற்பத்திலோங்கியவொன்றுறுப்ஙில்
வேரியங்குழலாய்நன்றுபன்னொன்றுவிளம்புமூன்றுமற்றவற்கே. (௪௩)

ஸ்திரீபுருஷர்களின் சென்மத்திரய விசேஷ விதி

எட்டினிற்கவிபொனன்றலவேழிலிருவகைத்திறத்தருமாகார்
மட்டவிழ்குழலாயன்றியுங்கடிக்குமடவரல்சென்மநாண்மூன்றுஞ்
சிட்டர்நன்றென்றார்மைந்தர்நாண்மூன்றுஞ்சிறப்பிலைராசிகளெவையும்
பட்டமேனேக்குநல்லவருதிப்பும்பலிக்கிலுத்தமமெனப்பகரே. (௪௪)

வாயசநிமித்தம்.

சாருமுற்பக்கத்தருங்கடிக்கமைந்ததக்கநாளாதிகடம்மிற்
சீரியபகலேமூன்றுறுபத்திற்றேர்ந்தநல்லோரைகள்பொருந்தப்
பாரினைமெழுகிவிதிப்படிமுன்னூல்படித்தவாயசம்பெலிபரப்பி
வேரியங்குழலாய்நன்றுதீதறிதிமிக்கதுமிவ்வகைவிளம்பே. (௪௫)

மணவினைப்படலம் முற்றிற்று.

நான்காவது
கூழ்விளைப்படலம்.

அக்கினியாதானம்.

வையமிந்திரனட்டொழுவனல்சுளகுமதியமூன் றுத்தரமினவயிற்
செய்யவன்மந்தன்வாரமாறிகழுஞ்செழுங்குளிர்குடங்கலைமீனம்
வெய்யவாமிருத்தையிவைகளுமொழித்துமிக்கநிலம்பலிகுருசேய்
உய்யவாமாட்சியுச்சமித்திரர்களோரையிலொளிசிறந்திடவே. (க)

ஆதவன்சோமன்மண்மகள்புதல்வனந்தணனிவர்கள்சேந்திரத்து
மோதியவொன்பானந்தினுஞ்சிறந்தவுபசயத்தினுமுறமற்றோர்
பேதியாதுரைத்தவுபசயமதனிற்பிறங்கிடச்சுத்தியெட்டாக
வேதியர்வேதமுறைப்படியோயம்விளைத்திடநன்றெனவேண்டே. (உ)

பூமிப்பிரவேசம்.

ஆதிரைபூசஞ்சித்திரைவாய்க்காலனுடமூன் றுத்தரஞ்சோதி
பூதமிந்நாளின்ஞெண்டுதேளேற்றிற்புகன்மதியவனிமான்புதல்வன்
வேதியனிவர்வாராதியினவமிவேண்டுபத்திரையுவாவகற்றிச்
சோதிடமுணர்ந்தோர்பூப்பிரவேசஞ்சொற்றனர்தெரிந்துரைதோகாய். (௩)

கிருஷியாரம்பம்.

ஒழுகுகாமரமூன் றுத்தரந்தோணியுயர்கரும்பசுரர்நாட்பூசம்
பழுதிலாவிவையிற்குருமதிபுந்திபளிங்கிவர்வாரமாதிகளில்
வழுவிலாவுவாக்களிருத்தைகளாறுமன்னியபன்னிரண்டெட்டுத்
தழுவிடாஞெண்டுகலைதடியேறுதாவுமீனெழக்கிருஷிசாற்றே. (௪)

அலப்பிரவாகம்.

புட்பனையத்தமான்சிரங்கரும்புபூசமைப்பசிசகடோணங்
கொட்புறுமனிலந்தோணியுத்தரங்கள்குன்றுசித்திரைமுறமூலம்
நட்புடைமகமென்றிவையிலேறலவனவ்விமீன்றண்டெழவியந்த
பெட்புறுகிழக்குவடக்கினைநோக்கிப்பிறைநுதால்செறுவுளப்பேசே. (௫)

கலப்பைச்சக்கரம்.

வேறு.

அருக்கனுடன்மூன் றுநாளுமமைந்தவேறதுநாசமாம்
விருத்தியாநுனிமூன் றுநாளும்வியந்தமூன் றும்மள்ளர்தா
மரிப்பர்மத்திமமாயபத்தும்வயங்குபாலமதைந்துமே
லுருத்தமேழியின்மூன் றுநன்றெனவோதினுருழவும்பரே. (௬)

பணிச்சக்கரம்.

வேறு.

பணிச்சிரத்தினுறுமூன் றுநாட்பயிர்பரந்தெழும்புழுவினல்விடு
மணிக்கழுத்தினுறுமூன் றுநாட்பயிறப்பெருத்தழுகுமன்றியே
மணிக்குடற்படுவயிற்றினுளதுமுந்நான்குமல்குமிகுதானியம்
கணித்தபுச்சமுறுநான்குநாளுமொழிகடையிலைந்துபதர்காட்டுமே. (௭)

பிசாவாபனம்.

அத்தமோணமுறங்குருச்சகடனிலமாகிகலஞ்சொல்மூன்
றுத்தரம்பனைசெக்குமூலமுறந்தனுத்தகர்மங்கைதேள்
பத்திரைத்திதியிருத்தைமூன்றினொடுபகருவாவெழுபளிங்குரு
வொத்தபொன்கவிதிங்கள்மாறினமுதயமாகவிரையுய்த்திடே. (அ)

கிழங்குவகை உண்டாக்க.

சுளகுமூலமடுப்புமாசிதுலங்குமங்கிசிறந்தமூன்
றளவுபூரமிதிற்றனுப்பகரரிவைமீனமமைந்தசொற்
றளர்வில்யாழெழுவொன்றுமம்புலிசாரும்வாரமதாகியாய்க்
களவில்கந்தமிடற்குநன்றுகரும்பனையிதுகாண்டியே. (கூ)

கொடிவகை உண்டாக்க.

சோதிகேட்டைகரும்புகன்னிதுலங்குதாலமுமரியமா
வோதுமான்றலைதோணிசித்திரையுற்றவிங்கிவையிற்றுலா
மாதிநண்டுசுறுவெழத்திகழம்பொன்வாரமதாகியாய்க்
கோதில்வல்லிகளாக்கநன்றுகொடுஞ்செய்வாளிநெடுங்கணாய். (க0)

விருக்ஷங்களுண்டாக்க.

பூசமோணமவிட்டமாதிரைபுணரிதேரிவைதம்மிலே
யேசிலேறரிகும்பமிவ்வுடனேன்றதேளெழவான்றசீர்
மாசில்புந்திதிஞதியாகவரத்தடித்திடைமங்கைகே
ளாசில்சாய்கைகிளர்ந்தநன்மரமாகநன்றெனவாய்ந்திடே. (கக)

வெற்றிலை, செங்கழுநீராதியானவை உண்டாக்க.

வேறு.

சித்திரைமூலம்பனைபணியத்தந்திகழ்முறம்பூசமாமிவையும்
வித்தகவெள்ளிமதிதிஞதிகளுமிக்கதாநாகவல்லிகளுக்
குத்திரமாசிகரும்புதேரோணமுடுபதிக்குருகுபொன்பூர
மத்தமெய்ப்பயறுநல்லதாமின்னேயமைந்தவுற்பலாதிகளவைக்கே. (கஉ)

கரும்புநட, புன்பயிர்செய்ய.

தோணிதேர்புரவிபூசநாட்செக்குத்தொடுகரமிவையிலம்புலியோ
டேணில்நன்கவிவாராதிகளாகக்கழைநடற்கழகதாஞ்சோதி
காணியசுளகுபனைமகமோணங்கண்ணியதேர்கலஞ்சதயம்
நாணுறும்வைவேல்விழியிணைமடவாய்நயந்தபுற்பயிர்க்கெலாநன்றே. (கங)

பனை, கமுகு, வாழை, மா, உழுந்து, பயறு உண்டாக்க.

பனைசகடோணமுத்தரமூன்றுபண்ணியகலம்பயறுடனே
நினைவுறுகுருகென்றிவைகளினுழுந்துநிகழ்பயறுதியங்குரங்க
ளனையவையிடற்குநல்லதாமாவிற்கழகதாமுத்தரங்கமுகு
நனையுறுதாலம்பரியினிலழகாநற்குருவரம்பைக்குநன்றே. (கச)

சகல பீசாங்குரங்களுக்கும் இராசிவிசேஷம்.

மேடமுமேமறம்பயிர்மிகும்பலிக்குமிதுனமுங்கடகமுஞ்சிங்கம்
மீடையாய்ந சங்கன்னியிற்புல்லுப்பிறங்கிடுந்துலாத்தினினன்றுங்
கிடமாந்தேளிற்சிலையினிற்களவாங்கிளர்கலைகுற்றமேவருத்தும்
நாடியகுடமேற்கலகமாமீனநல்லதாமெனப்பலகாடே. (கரு)

நெற்கதிராறுக்க.

வேறு.

அடுப்புமாசியொடோணமத்தமறைந்தவாதிரைசுளகுதே
ரெடுத்தநாளிவைதம்மின்மன்னுமிருத்தையன்றியதிதிகளின்
மடுத்தவோரைதிரத்துடன்குளிர்மல்கமால்சனிவெள்ளிபொன்
படைத்தவாரமதாதியிற்சனிபலமுறக்கதிர்பரிமினே. (கசு)

தானியசங்கிரகம்.

மாசிமூதுரைநவ்விசோணமடுப்புரோகிணிமற்றுமேற்
பேசுநோக்குடைநாட்களிற்சசிபீதகன்கவிமந்தனென்
றேசில்வாரமதாதியெய்தவிருத்தைவிட்டியுவாக்களோ
டாசில்சித்திரையன்றிநற்றிரமாகநெற்குவையாக்கிடே. (கஎ)

புவனந்தயோகம்.

வேறு.

ஏதினன்பத்திடத்தடையவிலக்கினத்திற்பொன்னுதிப்பவேழினன்கிற்
சோதிமதியெழும்புவனந்தத்திற்சங்கிரகிக்கிற்றுலங்கும்பைந்தாட்
சீதமலர்நறுந்தெரியற்செகராசசேகரமன்சிறந்தகீர்த்தி [னே.
மேதினிமேல்வளர்ந்துலவுந் தகைமையென்னத் தானியங்கள்மிகுக்குமென்

தானியபருவதம்.

வேறு.

பங்குனிமாசியிரண்டினுமொன்றியபாற்குனிமாசியினிற்
றங்கியவேறெழுநெற்குவைசெய்திடிற்றானியபருவதமா
மிங்கிசைகாரியுதித்திடவம்புலியைந்தெழவேழ்பொனுறச்
செங்கதிரோன்பதினொன்றினினின்றதுதேமொழிமேருவெனே. (ககூ)

தானியவிரயம்.

சந்தகமார்கழியுத்தரமூன்றுகரும்புடனுவணிமால்
மூந்துறுதோணிகுருக்கணைமூன்றுமொழிந்தவிந்நாட்களிலே
சந்திரன்மால்சனியந்தணனுமிவர்தந்தினமாதிவரச்
சிந்தைசெய்யோரைதிரம்பெறநீடியசெந்திருநெற்செலவே. (உ0)

நவபோசனம்.

சித்திரையோணமகம்பனைதேர்பரிதிங்களொட்டாவணிமூன்
றுத்தரமூலமுறங்குருவேகரமோதுகடங்கடல்கா
லிந்திறவாளிவிரித்தையுவாவிவையின்றியநற்றிதியிற்
றேறத்துறுதேன்தகர்மீனமொழிந்ததுணிந்ததிலுண்புதிதே. (உக)

நவபலபுஷ்பாதிகளுக்கு ராசி சுத்தம்.

அந்தணன்மால்சவியென்றிவைவாரமதாதிசிறந்திடவே
யிந்திருநாலழகன்றவைமேடவிராசிமலர்க்கிலைதேள்
மூந்துறுமீனெழுநன்றுபழங்கள்மொழிந்தவகைப்படியே
புந்திசெய்வாயையிரண்டினில்வந்துபுகாதிடயாவருமே. (உஉ)

கூழ்வினைப்படலம் முற்றிற்று.

ஐந்தாவது

பலவினைப்படலம்.

திரவியசேமம்.

இந்துருடேர்குருவத்தமொடீசனிரும்பனையுத்தரமூன்
றந்தமில்போரொடவிட்டமூலக்கையமைந்தவிந்நாளவையிற்
சுந்தரவோரைசுகம்பெறநல்லவர்தூயதிஞாயிறுவரச்
சந்தவுவாக்களிரித்தைசரங்கடவிர்ந்துதனங்கள்வையே. (க)

கிரயவிக்கிரயம்.

வேறு.

மூற்றின்மாசிமதியிந்திரன்புநர்தமூலமைப்பசிகலஞ்சிவன்
பற்றுபூரமுருடேர்குருக்களிறுபன்னுகுன்றுதிரியுத்தரம்
பெற்றநாளிவையில்வெள்ளிபந்திமதிபீதகன்றினமதாதியா
யுற்றதேளரிதுலாத்தினேறுதடியோங்காண்றுகொளவிற்கவே. (உ)

ஆடு, மாடு கொள்ளல்.

பரணர்தமாவணிவிளக்குநவமியொடுபூசமைப்பசிபுரந்தர
னிணையிரேவணிசுளகென்னுநாளவையிலேன்றநல்லவர்திஞாயிவந்
தணையவலைசகொளற்குநன்றெனவறைந்ததாலறிவினந்தணன்
றணிவில்வரமுறுபூசநாளில்வருதகரிலாடுகொளறக்கதே. (ங)

நவவஸ்திரந் தரித்தல்.

ஆதிசித்திரையொடத்தமூங்கின்முறமனுஷமந்தமொடுதோணிதேர்
சேதியுத்தரமென்மூன்றிலொன்றுவருதூயசேய்சனியெனச்சொலு
மேதமுற்றபெறுவாரமாதிகளிரித்தைதேளரியியம்புமீன்
பேதமுற்றசிலைதகமொழிந்துதரிபுதியநற்கலைகள்பூவையே. (ச)

நவவஸ்திரந்தரிக்க, இராசிபலம்.

மேடமன்னர்பயமேறுதானியம்வியன்றனந்தடிசுபங்குளிர்
கேடுசிங்கமடவாடனந்துலைகிளர்ந்தநன்மைவிதனங்கடேள்
பீடைவிஞ்சுசிலைகுணமுறுங்கலைபெருக்கும்வாழ்வுகுடமரணமீன்
றேடுமந்தனிலுடுக்கலாங்கருமைசேயினன்றுடல்சிவந்ததே. (ரு)

நவவஸ்திரந்தரிக்கத் தினபலம்.

கூறையைப்பசிநமன்பயங்கனல்கொளுந்துமாரல்சகடர்த்தமிந்
தேறுமச்சிசரிநாசமாதிரையிருந்தனங்கழைகுருத்துகில்
பேறில்சர்ப்பமகமரணமம்பரசர்பீடையுத்தரமுறுங்கலை
மாறினற்றனமதத்தமாம்பயறுவாகனம்மடிசில்வாயுவே. (௬)

காணுநற்பிரியமுறந்தரும்பனைகருத்தமைந்தவுடையிந்திரன்
பேணுமப்புடைவைசிதையுமூலமிகுபீடைநாரமுறுபிணிதுகிற்
பூணுமப்பொருவிலாடியோணமிடைபுட்டனஞ்சதயமரணநோய்
தூணமுட்கொளுவுடுக்கையாமுரசுதோணிநற்றனமெனச்சொலே. (௭)

நவவஸ்திரந்தரிக்க வாரபலம்.

அருக்கனிற்கலைவிரைந்துநையுமதியனுதினம்புனலினையுநோய்
பெருக்குமக்குசன்மிகத்தனங்கலைகள்பெருகும்புந்திகுருஞானமாம்
செருக்குமிக்கபுகர்புகலின்மெய்ச்சனிதினந்தொறுங்கலைபிறங்குமென்
றுரைக்குநற்பலமறைக்குளுற்றதெனவோதினார்முனிவருண்மையே. (௮)

தலைக்கட்டு; சிரவேட்டி.

இரலைசாகடுபயறனிலம்விட்டமுடனிக்கிரேவதிசெழும்பனை
குருவதாயதிரியுத்தரங்களிறுகுலவுநாளிவையின்மின்னனாய்
பெருமையானசிரவேட்டிதொக்கின்மிகுபீடுறும்பெருகவென்றிசே
ரரியவாரியர்குலாதிபன்றெரியுமம்மறைப்பொருளுரைக்குமே. (௯)

சாமரை, சலபாத்திரம் முதலிய பரிச்சின்னங்கட்கு.

மன்னர்மன்னுசெகராசசேகரன்மணவையாரியவரோதயன்
பன்னுசெந்தமிழ்வளம்பெறற்குதவுபரிசிலங்கவரிசித்தியாம்
பொன்னின்மிஞ்சியகளாஞ்சிகெண்டிகைபொலன்கலம்பிறவுமாம்பரிச்
சின்னமுள்ளதொகையாவுமிவ்விதிசிறந்தறிந்துரைசெய்சேயிழாய். (௧௦)

நவவஸ்திர தாரணத்துக்கு விசேஷகாலம்.

வேறு.

வேந்தரகமகிழ்வுற்றுத்தருங்காலுநான்மறையோர்வேண்டினாலுங்
காந்திபெறுமடவாரைக்கைப்பிடிக்குங்காலையினுங்கடவுண்முன்னும்
போந்தவெழுத்துபதேசம்பெறும்போதுமபிடேகம்புனையும்போதும்
மாந்தர்தமக்கருங்கோடியுடுப்பதற்குநாள்வாரமன்னுரென்னே. (௧௧)

நவபூஷணம்.

நாடுமெதிபுரவிகுருத்தேர்தோணிசித்திரைநற்றூலமத்தந்
தேடிவையிற்சனிபுந்திகுருவெள்ளிசசிவாரஞ்சிறந்தகால்கள்
கூடவருநந்தையுடன்பூரணையாந்திதிகூடக்கோதண்டம்பெண்
ணேடிடபமிதுனமீனெழக்கலன்கள்புனைவதுநன்றுரைக்குங்காலே. (௧௨)

இருணமோசனம்.

அந்தணனோடறைகாரிவாரங்களிரித்தையுவாவவரவர்நோக்கு
முந்தியகாலுதயமெனவவையன்றியிரித்தையுறுமுடவன்வாரத்
துந்துகுளிகோதயமுமுண்டாகவாதல்மற்றுமோங்குபெண்ணை
தந்தவிருசரணத்துமுகூர்த்தந்தேளொழவாதறனிசுதீரே. (௧௩)

ரோகாரம்பநாட்பலன்.

புரவியொன்பதிற்றீர்ந்திடுமெல்லதுபுகல்பலிபயறடுஞ்சோறு
பரியின்பந்தியிலுய்க்கவாயியம்பியபரணியைந்தெட்படிசோறு
விரவுஞ்சந்தியிற்கார்த்திகைக்கேழுடன்விளம்பெழுமூன்றுநற்பயறு
தரவுழுந்தொடுசொன்றிவாழ்துர்க்கைதானத்திற்பலியிடறகைத்தே. (௧௪)

பண்டியைந்துடன்பன்னொன்றுபாயசம்பகர்பிரமத்தலங்குபேரன், விண்ட
வாறுடனொன்பது மலர்த்தொடைமேவன்னந் தடாகமாதிரைக்குக், கொண்ட
வைந்துமுப்பக்கஞ்சாச் சிவப்பன்னங் கொன்றைவேய் மூவான்பான்பன்மூன்,
றுண்டவெண்சோறுமாயவன்றானத்திலுறுபலியிடுசெனவோதே. (௧௫)

பூசமேழுநல்லோதனமயானமாம்புகலரவாறுபன்னாளாந்
தேசுமேவியநல்விளநீர்புற்றுத்திகழ்மகநாலுமூன்றெழுநாள்
காசிலெள்ளன்னமீமத்திற்கணைக்குநல்லறையெழுமூன்றுமுற்கான்ன
மேசில்சாமுண்டிபங்குனிமும்மூன்றிற்சோறுமானினிகளிடமே. (௧௬)

கன்னியேழுநல்லோதனங்கருதுசித்திரையிருநான்கும்
பின்னுமவ்வளவைவகையோதனம்பிறழ்தருசித்திராலயங்கள்
மன்னுவாயுவீரைந்துநாற்பத்தைந்துவருமகட்கன்னநீள்கானஞ்
சொன்னவம்முறமரணமூவேழுறைதுலங்குழுந்தோதனஞ்சுனையே. (௧௭)

தாலமெட்டுமூவைந்துதேனோதனந்தண்மலர்மரவடிகேட்டை
யேலவாறிரண்டறைபிடிமாவன்னமியம்புசேட்டாலயமினிதா
மூலமூவேழுசுத்தான்னமிறையாமுக்கணனாலயநீர்நாட்
கோலவைந்துபத்தியவைசேரோதனங்குளிர்புனடுவெனக்கொள்ளே. (௧௮)

ஆடிமாதமொன்றெட்டுநற்கிருதமதனாலயமோணமெட்டடைசேர்
நீடுமோதனங்கதிரவனாலயநிகரில்புட்பத்துடன்றயிர்ச்சோ
றோடுமைம்முகனாலயஞ்சதயமதாறிரண்டாறுசாமைம்பற்
றேடுமென்னநீர்நறுமலர்பொருந்தியசெழுங்குளக்கரையிடைசெப்பே. (௧௯)

பூரட்டாதிபன்னிரண்டாறுதுலங்கியபாலோதனங்கணேசன்
நற்படுதானமுத்தரட்டாதிநவில்பதினாலுமாவன்னஞ்
சர்ப்பகங்கணனாலயங்கலமெட்டுத்தசமுழுந்தோதனஞ்சத்திர
முற்படநல்கிற்சுரமெனுமெவையுமோசனமாமெனமொழியே. (௨௦)

ரோக மரணயோகம்.

கவ்வைகுன்றுபுட்கேட்டையாதிரைகனல்கருதியபூதமுப்பூர
மெவ்வமின்றியிந்நாட்களும்பன்னிரண்டாறுடனொன்பான்
செவ்விதாயவித்திதிகளுங்கதிர்சனிசெய்யவன்றினங்களுமொன்றிற்
றவ்வையாமரணயோகமாமிதினோய்சார்ந்தவர்பிழைப்புறார்தாமே. (௨௧)

நோய்வரினும் விஷந்தீண்டினும் ஆகாநாட்கள்.

விளக்குமாசுணமாதிரை துளங்கொளிமேவுமுப்பூரமென்றிவையி
லிளக்கமின்றியேநோய்கொளிற்சாவெழவிசைத்தனன்றிரும்பனைதோணி
துளக்குநாளிவையிரண்டினும்நோயுறிற்றுயரொழிந்தழிவிலைமூலம்
வளக்குமங்கியாதிரைமகஞ்சுளகராமருவடுப்பராத்தொடின்மரிப்பாரே. (உஉ)

ஔஷதமுட்கொள்ளல்.

கலுங்கரஞ்சகடோணமைப்பசிபனைகால்கரும்பிந்துவுத்தரங்கள்
சிலம்புபுட்குருச்சித்திரையிவைகளிற்சேய்புதன்வெள்ளிபொன்றினங்க
ளிலங்குவெய்யவனிவர்தினமாதியிலிரித்தையிற்சரத்துடன்மடவா
டுலங்கவாறுடனேழெட்டுச்சுத்தியாத்தோன்றநன்றவுடதந்தொடற்கே. (உங)

சுரத்துக்கும் சன்னிக்கும் ஔஷதமுட்கொள்ளல்.

ஆவணங்கரமைப்பசிசித்திரையம்புலிபுகரவன்சனிமால்
மேவுவாரங்களாதிகளோரைவிளம்பியசரஞ்சராங்கிசங்க
டேவிரங்கனசுரத்தினுக்காஞ்சிவன்சுளகடுப்பனுஷமாதவனன்
றேவியவாரமிருத்தைகள்சன்னிக்குள்மருந்தருந்திடற்குரையே. (உச)

சஞ்சீவினிமருந்து உட்கொள்ளல்.

திணைமடந்தையம்புயத்தொடைப்புயத்திடைத்திகழ்செகராசசேகரமன்
மணவைதந்தமாலிருபதாம்புயமெனமருவினர்க்காத்துயிரளிக்குங்
குணமிருந்தசஞ்சீவினிக்காதிரைக்குலவியமுறமடுப்பனுடந்
தணிவில்வெங்கதிர்வாரமதிரித்தைகள்சார்ந்திடினன்றெனச்சாற்றே. (உரு)

வாத பித்த சிலேஷ்ம ரோக ஔஷதமுட்கொள்ளல்.

வாதரோகத்திற்கோணமைப்பசிபணிமகிழ்குருத்திஞதிகள்சயையாந்
தீதகன்குருகனில்நற்சுரர்குருப்பெறுதிஞதிகள்சார்நந்தை
மோதுபைத்தியந்தனக்குநன்றுதிரைமொழிகனலடுப்பொடுமூலம்
பேதமாஞ்சரராசிசெவ்வாய்தினம்பெறுங்கபந்தனக்கெனப்பேணே. (உசா)

கஅ - வகைப் பிரமேகத்துக்கும், குட்டத்துக்கும் ஔஷதமுட்கொள்ளல்.

இருஞ்சரத்துடனுக்கிரமிலகுவென்றிணையவுமாறினமிரித்தை
வருந்தியுற்றவீரொன்பதாம்வகைக்குநன்றருங்குட்டவகைக்குப்
பொருந்துபக்கமுந்தீயதாந்திவசமும்புகலுநாளவைகளுந்தீதாய்ப்
பரிந்துலக்கினத்தெட்டினிற்றீயவர்பயிலுறநன்மருந்தினைப்பண்ணே. (உஎ)

பெருவயிறு, பித்தம், க்ஷயம் முதலிய சர்வவியாதிகட்கு ஔஷதம் உட்கொள்ளல்.

பெருவயிற்றினுக்காதிரைமகமுறம்பித்தமான்றலையடுப்பரவந்
தரணிபுத்திரன்வாரமுமாங்கயந்தனக்குச்சேய்பார்த்திடச்சட்டி
வரவொழித்திடச்சாதாரணநாளதாய்மதித்திடுவியாதிகட்கெல்லா
மிரவிசேய்சனியுதித்திடக்கண்டகத்தெழமருந்தியற்றுவதியல்பே. (உஅ)

சத்திரம்வைக்க; காரமிட; சுட நாட்கள்.

முக்கணன்கேட்டைகௌவைதேட்கடையிவைமுடவன்சேய்வாரமாதிகளிற்
பக்கமாகியவிரித்தையில்ஞெண்டொடுபாவைமேடந்துலையுதிப்பத்
திக்கதெக்கதிபெற்றிடப்பாவர்கள்சிறந்தகேந்திரத்துறநோக்க
தக்கநாட்பொருந்தச்சுடவிடுங்காரஞ்சத்திரமுதவிடச்சாற்றே. (உகூ)

அட்டைவிடல் முதலியவைக்கு நாள்.

வேறு.

படத்தராக்குருவாதிரைபாவகன், தொடுத்தபூரமூன்றிந்திரன்சோதிநாட்
டடத்தனத்திருவேகாரஞ்சத்திர, மிடச்சுடச்சஹுகம்விடவேய்ந்ததே. (௩0)

தயிலாப்பியங்கம்.

"இரவுவாப்பதினுன்கொடியம்புமொன், ஞெருவுமாறெட்டேப்பன்னிரண்டுத்தரம், அரியரன்புனிதன்சென்மமன்றியே,மருவுசங்கிரமம்விட்டெண்ணெய்வார்த்திடே. (௩க)

ஸ்திரீபுருஷருக்கு எண்ணெயிட நாளும் தோஷ நிவாரணமும்.

புந்திசந்திரன்மந்தன்புமான்கழுக், கந்தவெள்ளியொடாரலரிவையர்க்
குந்துவாரந்திதியவைதீதெனிற்,சிந்திநெய்மண்டெறித்தெண்ணெய்சேர்த்திடே

வியாதியாளர் சிசுக்களாதியோர்க்கு தயிலாப்பியங்கம்.

நண்ணுதாகம்பெரும்புகழ்நாசம்வாழ், வண்மைமைந்தர்கள்சாவழிவாயுவாம்
விண்ணில்வெய்யவனுதிவிரும்பநோய்க், கண்ணர்பாலர்விருத்தர்க்கெக்காலமே.

ரோகஸ்தர் ஸ்நானஞ்செய்ய ஆகாதநாள்.

பாலைமாசியுரோகணிபாந்தள்மூன், றேலவுத்தரஞ்சோதியிரேவதி
சீலவெள்ளிகுபேரன்றினுதிமெய்க், கோலநோயர்குளித்திடக்குற்றமே. (௩௪)

ரோகமுக்தஸ்நானம்.

ஏனநாட்களிரவிபொன்சேய்சனி, யானபுந்திதினுதிகளட்டமி
தானிரித்தையுவாக்கள்சற்கோட்பலன், தேனனுயுறுமூலைசிறந்ததே. (௩௫)

ஆயிரம்பிறை.

வேறு.

கருதுமானுடராயிரப்பிறைகாணிலங்கவர்வயதினன்
வருடமெண்பதுமாதமெட்டிதில்மதியமாயிரம்வந்தவா
றரியவாண்டுகளஞ்சிலஞ்சினிலதிகமாதமிரண்டுட
னுரியவாயுகமாகுமாதமுடன்படத்தொகையொன்றுமே. (௩௬)

சதாபிடேகம்.

சொன்னவிவ்வகையாயிரம்பிறைதொழுதல்சூரியவாண்டுநூ
றென்னவாயுகமுற்றுவாழ்தலிசைந்தமன்னவரன்றியே
மன்னிடுங்குரவோர்விரும்பியமாறில்சொர்க்கமுறும்பொருட்
டுன்னிமிக்கசதாபிடேகமுரைத்ததாலிவையுற்றிடே. (௩௭)

பதங்கனுத்தரமாதல்வேறுபழித்தமாதமதன்றியே
யிதங்கொணல்வினைமாதமாமிவையிற்செனித்திடுநாளின்மூன்
றுதிர்ந்தவுத்தரமத்தமோணமுருட்கலங்கடலிவைகளில்
விதங்கொள்பக்கமுவாவிரித்தைகள்விட்டவொற்றையின்மேவிடே. (௩௮)

சத்தமெட்டுறவெள்ளியோடுசுரேசன்மந்திரிபண்டிதன்
வித்தகச்சுதாகரனெனப்பகர்மிக்கவாரமுமவர்கடம்
வைத்தவோரையுமுதயமும்பெறமன்னுநூறபிடேகமுந்
தொத்திணர்த்தொடையோதிலஞ்சிதுணிந்துபண்ணநினைந்திடே. (௩௯)

சிராத்தம்.

வேறு.

மாசிபுரட்டாதியினில்பரபக்கமதித்திடுபஞ்சமிக்குமேல்வாரவர்க்கன், தேசி
ரவிசேய்மந்தன்பிற்பன்ஞன்காந்திதிநந்தைகழித்தவிட்டஞ், சோதியத்தம்பூசம
கஞ்சித்திரைமான்றலைபேரோணம்புரவிபனை நீரிவையிற்புதல்வர்பாரி, யோசை
பெறுகர்த்தாவென்றவர்நாண்மூன்றுமொழித்திரண்டு சிராத்தமுஞ்செய்துவனும்
ப்பாயே. (௪௦)

பிரேதகருமம்.

பற்றுதிதிபன்ஞன்கினோடுநந்தைபத்திரையென்றிவைகளுஞ்சேய்கவிபொ
ன்வார, முற்றகனல்கரும்புமுறமாடிதன்னோடுணும்புரட்டையுத்தரமென்றோது
நாள்சக, ளுற்றசிலைமீனலவன்றலையதேறுதூயவர்களோரைகளுந்தள்ளித்தீமை,
பெற்றவர்கள்பெலம்பெருகமடவாயெல்லாப் பிரேதகாரியங்களுக்கும்பேசுவாயே.

மரணம்; தகனம்.

வெய்யவன்மால்சனிதிங்க டினத்துநந்தைமேவுசயைபூரணைமற் றிரித்தை
கூடி, லையமிகுமரணமெனிற்றகிக்கினன்றுமவ்வர்க்கமனைத்தினுக்குமன்றிச்சேய்
பொன், றுய்யகவிவாரமுறமுக்காலுளிற்றுலங்கியபத்திரையின்மரித்திடுகிற்பிரே
தஞ், செய்யகனற்படுகிலவ்வர்க்கத்தின்முப்பிரேதந்திண்ணமுறவிளையுமெனச்செ
ப்பினரே. (௪௨)

பாஷாணஸ்தாபனம்; அஸ்திசஞ்சயனம்.

ஆருமதிபொன்கவிமால்வாரஞ்சாரிலாகாதுகல்லெடுக்கவறையுங்காலைத், தா
ரணிசேயிரவிசனிவாரமாதிசார்ந்திடவக்கல்லெடுக்கச்சாலநன்றாங், காரிகையாய்
தெசாகத்துண்டாமிந்துக்காணினன்றன்றொருநான்குகருதஞ்சொன்பான், றோர்
பதினொன் றெனுநாளில் வருணத்தோர்க்குத் திதிகளத்திசஞ்சயனஞ் செய்யந
ன்றே. (௪௩)

ஏகோதிட்டம்; சபிண்டீகரணம்.

அந்தணன்சேய்கவிமுடவனிவர்கள்வாரமத்திசஞ்சயனத்திற்காகாவாகு, நந்துபன்னொன்றீரா றெண்ணிரண்டாறைந்தா நாண்மேலேகோதிட்டமுதலவாதி, சிந்திநன்றென்றொருநான்குமாகா நாட்கள்திகழீராறையொன்பான் மாதநான்கு, வந்தவிருமூன்று பதினொன்று சொற்ற வருடமொன்றுஞ் சபிண்டிக்கு மடநல்லாயே. (௪௪)

இன்னமரணத்துக்கு நாளாதி வேண்டாமென்பது.

வேறு.

பரித்துமாதாப்பிதாமுதற்பான்மையோர்
மரித்திடிற்றகனதிவருதினத்
துருத்ததன்மனுள்வாரமதோர்ந்திடா
தருத்தநன்றிரண்டாம்பிறையன்றியே. (௪௫)

நாராயணபலி.

ஈனநீரராவானையிரும்புலி
யானவாதியபெழிதீர்ந்தவர்
வானநண்ண மறைப்படிமங்கையே
தானநாரணன்றன்பலிசெய்திடே. (௪௬)

அண்ணலாண்டுநிறைந்தபின்பன்னிரண்
டின்னுபவ்வமுபயங்களாதல்சீர்
மன்னுமோணம்வரவாதல்செய்கலீர்
மின்னும்வெம்படைக்காம்வெள்ளிவேண்டிலே. (௪௭)

சாந்திகபௌடிகம்.

வேறு.

பெண்ணைகரும்புத்தரமூன்றனிலஞ்செக்குப்பிதிர்நாள்நாவாயோணமத்தம் பூசம், நண்ணியசிரவிட்டமெனப்பகருநாளில் நலந்திகழ் முற்பக்கத்திலிரித்தை யெட்டோ, டெண்ணியவா மூவாவொளிந்த திதியிற்சுத்தி யெட்டாகச்சுரர்குரு மால்வெள்ளிதிங்கள், திண்ணியவாராதிகளிலோரைகூடச்செய்சாந்திபௌடிகத் தைத்திருவொப்பாயே. (௪௮)

பலவினைப்படலம் முற்றிற்று.

ஆறுவது

வேந்தர்வினைப்படலம்.

இராசாபிடேகம்.

ஓதியவுத்தராயணத்திற்குடநீத்தலாதுத்தமமத்திமங்கன்னிசிலைநண்டன்றித், தீதறுதக்கிணாயனமுற்பக்கநன்றாந்திகளவர்மூன்றாங்கூறாகவன்றிப், பேதமுறுமிருபக்கமவையில்விட்டிபிறழ்பக்கச்சித்திரையென்றிவைகணீத்து, வேதியன்மால்புகரிந்துவாரமாதிவிரும்பியெட்டேசுத்திபெறவேண்டுவாயே. (க)

மங்கைதுலைமகரந்தேளொழித்தல்லாதுவருமோரைபெறவானமலினநீங்க, வங்கையுருடோர்கரும்பூசமோணமம்புலியிந்திரன்போந்தைதோணிமூன்றாய்ப், பங்குறுமுத்தரம்புரவிபயறிந்நாளிற்பகற்காலத்தபிடேகஞ்சுட்டநன்றா, மங்கிதனின்மடநல்லாய்நம்பிராட்டிக்கிளங்குமரர்க்கிவ்விதியையியற்றிக்கொள்ளே. (உ)

பட்டங்கட்டல்; முத்திரைமோதிரங் கொடுத்தல்.

மன்னவர்க்கும்பன்னியர்க்குஞ்சாமந்தர்க்கும்மந்திரிக்குஞ்சேவகர்க்குமற்றுளோர்க்கும், பன்னிலென்றும்யானைகட்கும்பரிக்கும்பட்டமியற்றிடுகிலபிடேகப்படியேகாண்க, கன்னமதி குருவனுஷஞ் சகடுசோதிகடலொடு மூன்றுத்தரங்கடொடங்கிமூன்றின், முன்னுறுவாரோதயங்கணன்றாய்வேந்தர்முத்திரைமோதிரங்கொடுக்கமொழிந்திடாயே. (ங)

மங்கலங்கேட்டல்.

சிவிகைகரங்கொடிரோணங்கரும்புகேட்டைசெங்கைபனையுத்தரமூன்றசுவினியிந்நாளிற், சவுமியன்பொன்றிங்கள்கதிர்வெள்ளிவாரஞ்சாருமுதயாதிகளிலிரண்டொன்றைந்தே, ழவமறுமெட்டாறொருபதைமூன்றாயவத்திதியின்மங்கலநன்றருக்கனுதி, கவையகல்சீ ராயுவினைவாழ்வுசெல்வங் கைப்பொருள்சாவெனப்பலன்கள்கருதுங்காலே. (ச)

சங்கீத நிருத்தாதி.

உடைகுளம்பாவகன்கொடிறுசுளகுதோணியுருத்திரனுவணியடுப்புப்பயறிந்நாளிற், புடைதருநற்றிதிகளில்வாராதியெல்லாம்பொருந்தியநற்கோள்கள்பெற்றராசிதேள்கர்க், கடகமரிமிதுனம்விற்றுலைமீன்வாய்ப்பக்கலந்திடுசங்கீதமுடன்கவிஞர்சொற்ற, விடமுடையநிருத்தாதிகன்மமெல்லாமிளங்கொடியாயிவைகூடவியற்றுவாயே. (ரு)

நவகரம்.

புணர்தமுருடோர்பவனமத்தமோணம்பூராடமான்றலைபுட்பயறுமூன்றா
யுணர்வருமுத்தரமாதிரையின்னாளிலுயர்குருபார்க்கவன்புந்தியிவர்வாராதி
யனையவிருநான்கிருத்தைவேதன்பக்கமமாவாசையொளிதிதியிலாடுசாடி
குணமுறுதேளன்றியெட்டேசுத்தியாகக்குலவியபூவிறைகரங்கள்கொள்ளலாமே

இராஜதரிசனம்.

அயமுலக்கைபுட்கரங்காற்குளநேர்வானோடறைகலந்தேர்பனைசமூன்று
றுந்தூய, வயமுறுத்தவுத்தரங்களிவையிற்புந்திமதிகவிபொன்னிவர்வாரோதயா
தியாகப், பயமுறுத்தவிரித்தையுவாவெட்டுவிட்டிபழித்தனுகூலிக்கவிரும்பாரே
ழ்தாங்கும், நயமுறுத்தமன்னர்தமைக்காண்கநன்றுநன்றுதிரமுபயமெனினடுவெ
தாமே. (௭)

இராஜதரிசனத்துக்கு விசேஷவிதி.

மன்னுகாத்தியாயனசூத்திரத்து மன்னியகாசிபகோத்ரமருவு கேண்மைச்,
செய்யசதுர்மறைவாய்மைக்காசிவந்தசெகராசசேகரனுமன்னனுதி, துய்யபுகழ்ப்
பூசுரமன்னவரைக்காணச்சோபனஞ்சேர்மன்னவரைக்காணலாகும், வெய்யமரு
ம்வணிகர்குலவேந்தர்க்கன்றிவேளாளவேந்தர்க்காம்வெய்யோன்சேயே. (௮)

இராஜசேவை.

வேறு.

உத்தரமூன்றுதோணியுருள்பனைபூசமோண
மத்தமிந்தயம்நேர்வான்புள்ளாகுமிந்நாட்கள்காசின்
கொத்தணிமுடிக்குச்சொன்னகுணங்கள்வாராதிபக்கஞ்
சுத்தம்வந்துதிப்பவேந்தைத்துயரறச்சேவைசெய்யே. (௯)

அத்திரசத்திராப்பியாசம்; ரதாரோகணம்.

வேறு.

மாசிகலம்புரவியுருள்மதிபுநர்தம்பனையோணம்வாயுவத்தம்
பூசமொடுசித்திரைமூன்றுத்தரங்களிந்நாளிற்புந்திவெய்யோன்
தேசுறுமம்புலிகவிபொன்றினமுதயமாதிபெறத்திகழுநந்தை
யேசறுபூரணையில்வில்வாளியற்றநெடுந்தேரேறவிசைத்தாரென்னே. (௧௦)

வில், வாள் முதலியவற்றின் பிரமாணம்.

சிந்திக்குமிரதவிதிசிறப்பத்திலாகுநெடுஞ்சிலைக்குநீளம்
வந்தித்தநான்குதலைதொண்ணூறென்றறைவர்வடிவாட்குநீளம்
பந்தித்தவிரலைம்பானாகுமெனப்பகர்வரிவ்வாட்பற்றுவோர்க்கு
முந்துற்றபொருத்தவகைமுனிவோர்களுரைப்படியேமொழிவாய்மின்னே. (௧௧)

மானவிதானம்.

சுற்றெயில்கோபுரமிரதந்துவசதண்டம்தெண்டாகுந்துலங்குவிம்பம்
பற்றியவர்சனஞ்சுடர்வாள்பயில்காளங்கலம்விளக்குப்பரிசைசாபந்
தொற்றியந்தர்ப்பணம்வாசல்காவிவைகள்விரலாகுஞ்சின்னங்காசு
நற்றுகொழுவாபரணமிவையவையாமளவுநாட்டுங்காலே. (௧௨)

கட்கானுகூலியம்.

வேறு.

அடுசுடர்வாளினீளமளந்திறைவலதுசெங்கை
நடுவிரலிறையதாக்கிநற்றியகுணத்தாற்றுக்கிக்
கொடைநிதியுடனேகூட்டிக்கோவினாலீந்தசேடந்
தொடிபடுமெங்கைநல்லாய்துவசமேமுதலாய்ச்சொல்லே. (௧௩)

துவசாதிகளின் பலன்.

கேதனம்பொருளார்தூமங்கேடதாஞ்சீயம்வென்றி
யோதுநாய்பீடையாமேறுறுபுவிபுரக்குங்கோகு
தீதுறுவிதனந்தந்திசெல்வங்கார்மகளேயாகிற்
போதணிகுழலாய்நன்மைபொருந்திடாதென்றுபோற்றே. (௧௪)

கெஜகர்மம்.

கந்துகங்கொடிறுமாசிகரம்பனையிந்துதோணி
மூந்தியகரும்புசோதிமும்மையுத்தரங்களோணம்
வந்தபுள்ளுருளிந்நாளின்மதியவன்மறையோன்வெள்ளி
புந்திவாராதியோரைபுகக்கெசகர்மம்போக்கே. (௧௫)

யானைஏற, அங்குசம்பிடிக்க.

நல்லவர்சிறந்தவோரைநாட்டியகால்கள்சாரப்
புல்லியபக்கம்நன்றாய்ப்பொருந்தவெங்கரிக்கும்வெய்ய
மல்லலங்குசமேற்கொள்ளமதித்ததாமரையோரீதிற்
கொல்லவில்சாலைகட்டற்குரைத்ததுமிவ்வாறன்றே. (௧௬)

சதுர்ப்பாதசாலை.

வேறு.

அங்கியினிருதிமீதிலானசமெருமைவாயுத்
தங்கியதிசையிலாகுஞ்சாருமீசானமீது
துங்கமாவுறைதற்காகுந்துவாரத்திற்கிடமேயாகி
னெங்குமாந்தந்திவாசியிவையுடைசாலையென்னே. (௧௭)

அசுவகருமம்.

பரிகளைசோதிதோணிபரணியிந்தங்கிகாக்கை
குருமுறமிவையில்வெள்ளிகூரியோன்செம்பொன்றிங்கள்
விரவியவாரமாதிமிகத்திரவெண்டுசாரப்
புரவியின்கருமஞ்செய்யப்புனையிழையிரித்தைபோக்கே. (௧௮)

பால்கறத்தல், தறிநாட்டல், தயிர்கடைதல், வெண்ணெயுருக்கல்.

கண்ணியநல்லநாளிற்கதிர்மதியுதிக்குமோரை
நண்ணப்பால்கறக்கச்சேர்க்கநற்றயிர்கடையநன்றாந்
தண்மதிவாரத்தோரைசசியெழத்தறிக்குநன்று
வெண்ணெயதுருக்கத்திங்கள்மேவுநாட்சுளகுநன்றே. (௧௯)

சுவாதி சம்பாதியோகம்.

விளக்கினிற்சுடரோன்காலமேவியவுலகுள்ளோர்க்குத்
துளக்குறுபீடைசெய்யுஞ்சுவாதிசம்பாதியோகங்
கிளக்குமக்காலைசாந்திகேண்மைமன்னவர்க்குவேண்டுங்
குளப்புறுகற்கிசாந்திகோல்வளைவிதித்துக்கொள்ளே. (௨0)

அசுவசாந்தி; கெஜசாந்தி.

ஐப்பசிமாதமன் றியங்கிரான்மாதமாத
லெய்ப்புறுமுதலாம்பக்கத்திருநான்குபன்னேந்தீரா
ரெப்புறுதிதிகள்கூடவோரைகளசுவசாந்தி
மெய்ப்புறச்செய்யிலுய்யும்வேந்தயம்வேழமின்னே. (உக)

திருவாண்டெழுதல்.

ஆதவன்மிதுனத்சன் றியலவனினிற்குங்கால்த்
தோதியபுகர்தஞ்செங்கையில்லனுகூலவோரை
தீதுறுபெலன்கள்பெற்றுத்திகழ்ந்செழுமகிழ்ந்துவேந்தை
யேதமில்திருவாண்டுற்றவெழுத்தினையிடுவிப்பாயே. (உஉ)

அகத்தியபூசை.

கன்னிநாடன்னில்வெய்யோன்கலந்திடுகோலத்தாய
மின்னியபகன்முகத்துவிளம்புதெக்கிணத்துக்கும்பந்
தன்னிடைப்பிறந்தோற்கர்க்கியந்தரணியில்வேந்தர்நல்லோ
ரன்னவரளிக்கில்வாழ்வுமாயுவும்புகழுமாமே. (உ௩)

வேந்தர்வினைப்படலம் முற்றிற்று.

ஏழாவது

கோசரப்படலம்.

யாத்திரைக்குக் கோசரசுபம் முதலியன.

நன்மைசால்கோசரங்கணயந்திடுகாலமாக
வின்மலிபுகரோன்புந்திமேதினிமைந்தனென்போன்
முன்னிடமொழிந்துமற்றைமொழிகுருவெள்ளியாயோர்
புன்மைகளொழிந்துநன்றாய்ப்புகலுயாத்திரைக்குப்பொன்னே.(க)

கோசரவிதி; சென்மமுதல்.

வேறு.

கோளனைத்தும்பன்னொன்றுமாறுமூன்றுகுலவியபத்தருக்கற்காமிதிற்பத்தோம்பில், வாளுறுசேய்மந்தற்காமூன்றுபத்துவழங்காறேழொன்றுபனிமதிக்காம்பத்துத், தாழுறுமேழாறொழிந்தவெல்லாம் வெள்ளி தனக்காமைந்திரண்டுடனேழ்தக்கவொன்பான், கேளுறுமந்திரிக்காமாறெட்டுப்பத்துக்கிளரிரண்டினன்கிற்புதன்கிட்டினன்றே. (உ)

சந்திரலக்கினகோசரவிதி.

ரவிபலன்.

வேறு.

நற்பதியகற்றும்போதநடைதருமரசர்தம்மாற்
பொற்புறுசெல்வங்காட்டும்பொருந்துநோய்பீடைசேர்க்குஞ்
சொற்படுவினைகடீர்க்குந்தூரம்போநோய்சாவாக்கும்
பற்பொருள்பூமிநல்கும்பழிதருமிரவிபாவாய். (௧)

சசிபலன்.

ஓதனமுதவுமத்தமொழிக்கும்பொன்பெருக்குநோயாம்
மேதகுகருமக்கேடாம்விளைந்திடும்வித்தமேமந்
தீதறவிளைக்குஞ்சாவாந்திகழ்மன்னர்பயமுண்டாக்கு
மாதியசுபமிலாபமளிக்கும்பொன்னகற்றுமாலோன். (௨)

குசன், சனி இராகு கேது பலன்.

பெருக்குமெய்ச்சோபங்கேடுபிறங்கியவெற்றிநோய்க
ளருக்கியமோகநன்மையாம்பழிவிதனம்பீடை
நெருக்கியவிவாதங்காட்டுநிகழ்ந்திடும்விவாகங்கூட்டுந்
தருக்கியவிரோதஞ்சேர்க்குஞ்சனிகுசனரவுதாமே. (௩)

புதன்பலன்.

பிணிப்புமெய்ப்பொருளோடொன்னார் பெரும்பயமிடியுண்டாக்குந்
தணிப்பறுகலஞெய்மானந்தரும்பயமளிக்குந்தக்க
கணிப்புறுமழகுசெல்வங்காட்டுநோய்படுக்குஞ்சீத
வணிப்பணிக்கிரணக்கற்றையம்புலிமைந்தன்றானே. (௪)

குருபலன்.

மனத்தடுமாற்றங்கல்விவாதுநோய்நன்மைதுக்கங்
கனப்படுசெல்வமாக்குங்கருதியசோகங்காட்டுஞ்
சினக்கயல்விழியார்ச்சேர்க்குந்திகழ்பதிபிரிக்குமேம
மினப்பழுதளிக்குமண்டத்திமையவர்குரவனென்னே. (௭)

சுக்கிரன்பலன்.

நோயறும்புகழ்சேர்நன்மைநுவன்மகவளிக்குமத்த
மாய்வுறுஞ்சிந்தைநோவுவருத்துமெய்ப்பொருள்பூணக்கு
மேயுமெய்ப்பீடைகாட்டுமெவைகளுமிலாபமாக்குங்
காயமேபெருக்குஞ்செல்விகலைப்பெருங்கவியோன்காணே. (அ)

சூரியகோசரவேதை.

வேறு.

அறைகதிர்பன்னொன்றாறுமூன்றீரைந்தாமறுகோட்களைந்தீரா, நிறை தருமோன்பானுன்குறின்விருத்த யெட்டுநான்கைந்திரண்டொன்பான், ம றைதருமொன்றேழாறிரண்டாகாமன்னியவெட்டுமூன்றூறே, டுறையிரண் டீரைந்தொருமையேழ்பன்னொன்றென்றினன் றுறுசனியொழித்தே. (௧)

சந்திரகோசரவேதை.

அம்புலியேழொன்றாறுபன்னொன்றீரைந்துமூன்றாமிரண்டைந்து, வம்பில்பன்னிரண்டெட்டீரிரண்டொன்பான்மற்றவர்விருத்தமாமிரண்டு, நம்புநான்கைந்தெட்டாறிரண்டொன்பானன்றலவொன்றுமூன்றெட்டே, ழிம்பர்பன்னொன்றுபத்துறின்வேதையிரும்புதனொழிவதாமியல்பே. (௧௦)

புதகோசரவேதை.

புந்தியாறெட்டுப்பத்துநான்கிரண்டுபுகழ்பதினொன்றழகல்லார், வந்தவொன்பானொன்றெட்டுமூன்றைந்துமருவுபன்னிரண்டெனில்விருத்தம், முந்துமொன்றொன்பானைந்து பன்னிரண்டேழ் மூன்றுறிற்றீயனொன்றீரைந், தைந்துபன்னொன்றேழ்நான்கினினன்றாமம்புலியொழிவதாமணங்கே. ()

குருகோசரவேதை.

குருவிரண்டொன்பதேழ்பதினொன்றுகுலவுமைந்தழகுபன்னிரண்டு, விரவியபத்துமூன்றிருநான்குவிளம்புநான்கொழிந்தவர்விருத்தம், கருதுதீதொன்றுமூன்று நான்கெட்டுக்காட்டு பன்னிரண்டுபத்திருமூன், றொருவுமொன்றிரண்டைந்தேழ்பதினொன்றோடொன்பதாறுறினலனோதே. (௧௨)

சுக்கிரகோசரவேதை.

ஒள்ளியோனைந்தொன்றிரண்டுமூன்றீரா றொன்பதெட்டீரிரண்டோதுந், தெள்ளுபன்னொன்றுசிறப்பிலாரொன்பான்றிகழ்ந்தவெட்டேழொன்பதாறு, விள்ளுபன்னொன்றைந்தொருபது மூன்றுமேவிடின் விருத்தமாறீரைந், தெள்ளுமேழாகாவென்றுபன்னிரண்டாறிரண்டுறி னன்றெனவியம்பே. (௧௩)

கோசர சுபாசுபகாலங்களிலே செய்யத்தகுவனவும் செய்யத்தகாதனவும்.

வேறு.

அவ்வவரோரையாதியாயடைவிலாங்குறுகோசரபலன்க
ளிவ்வகையுணர்ந்துநன்றெனிற்கருமமெவைகளுமியற்றுதலியல்பாஞ்
செவ்வியழலையாய்கோசரகாலந்தீதெனிற்பிறமனைச்செலவு
வெவ்வியல்வேட்டைவாகனமாடல்வேண்டலென்றியம்பினார்மேலோர். ()

கோசரமிரண்டெனல்.

எண்ணுற்வியந்தகோசரவிதிகளிருவகையியன்றவாறியம்பிற்
திண்ணியவுடலாந்தண்மதியோரைசெனித்திடுமோரையதுயிராம்
நண்ணியவிவையேலுடலுயிரிரண்டும்நன்மைமிக்கமைந்துறவெண்ணிப்
பண்ணமர்மொழிவேல்விழிமதிமுகத்தாய்பகர்ந்தனரெனப்பயன்பாரே. ()

கிரகசாரசங்கியையும், பலன்செய்யுங் காலமும்.

கதிர்புதன்கவியோர்மாதமொன்றரையாங்காசினிமகனொருவருடஞ்
சதிர்குருமந்தனிரண்டரையரவஞ்சாற்றியவிரண்டுமொன்றரையா
மதியிரண்டேகால்நாளெனச்சரிக்கும்வகைபலனுதியிற்கதிர்சேய்
விதுபுதன்முழுதுங்கவிகுருநடுவாம்விடவராச்சனிகடைமின்னே. (௧௬)

வக்கிராதிசாரபலன்.

ஓதுவக்கிரகங்களுளதிசாரமுறிற்பலனுதயவோரையிலாஞ்
சோதிமெய்க்குருவுக்கப்படியன்றுதுறுபலன்முன்பிலோரையிலாந்
தீதறக்கனலிகவிபுதன்செவ்வாய்திகழ்பதினறுதினஞ்செம்பொன்
போதவச்சனிமூவிரண்டதாந்திங்கட்புகல்முனம்பலம்பெறும்பொன்னே.

புத்திரபலன் பெற்றூரனுபவிக்குங்காலம்.

ஆடவர்க்கீரெட்டாண்டளவாகவரும்பலனன்னைதந்தையர்க்காம்
பீடுறுமதன்மேற்றமக்குறுமன்றிப்பெண்மகார்க்கொன்பதாண்டளவுஞ்
சேடுடையவ்வையையன்மாட்டாகுந்தேர்பலனதற்குமேலெல்லாங்
கேடறுகொழுநன்புசிக்குமென்றறிந்தோர்கிளிமொழிவிளம்பினர்கேளே.

இவ்விவர்களைக் கிரகதோஷந் தீண்டாவெனல்.

மறையவர்தம்மைவழிபடுவோர்க்குமன்னியகுருவழிநிற்போர்க்
கறநெறியுடையோர்மொழிசெவிப்படுவோர்க்காரணங்கேட்பவர்க்கோமத்
துறைதவந்தருமஞ்செய்பவரகத்திற்சுத்தமேயுறுபவர்க்கமைந்த
குறைவறுநியமஞ்செபமுள்ளோர்க்காகக் கோசரம்பலிக்குமோகொடியே.

கோசரப்படலம் முற்றிற்று.

எட்டாவது

யாத்திரைப்படலம்.

யாத்திரைமாதவிதி.

வேறு.

உத்தமமார்கழியுடனேயாவணிசித்திரைமூன்றுமுறைதேர்மாசி
சுத்தமுறுவைகாசிபுரட்டாதியைப்பசிதைதுலங்குமானி
மத்திமமாங்கார்த்திகைபங்குனியாடிமதிக்குங்காலதமமாகும்
மெத்தவுமவ்வாடிதனைப்பழித்தனர்கள்சோதிடனூல்மிகுத்துளோரே. (௧)

யாத்திரா திதிசூலம்.

ஓங்குயர்முற்பக்கத்திலாறெட்டுப்பன்னிரண்டொன்றுவிட்டு
பாங்கிருத்தைபிற்பக்கம்பழிப்பாகுமிவையன்றிப்பன்னுநந்தை
திங்கறுபத்திரைசயைபூரணைகீழ்த்திசையாதிசிறப்பதாகுந்
தூங்கியவெட்டாறீன்றீராறுகிழக்காதிதிசூலமென்னே. (௨)

யாத்திரா நக்ஷத்திரசூலம்.

மறையவனைப்பசிபெண்ணைமதியவிட்டங்கரமோணம்வழங்குதோணி
குறைவறுமிந்நாட்கடிகையெவையிற்குநன்றென்றுகுறித்தாரன்றி
யுறையுமனல்நாளாதியேழேழாயபிசித்தொடுத்துமின்னே
நிறையுறுகீழ்த்திசையாதிநான்கினுக்குமாஞ்செலவுநேருங்காலே. (௩)

பரிகசக்கரம்.

மன்னுபெரும்பரிகமதுவன்னியினும்வாயுவினும்வரையொன்றுக்கித்
துன்னியநாள்மகமாதிபரியந்தம்மேற்கினுக்குந்தலங்குந்தெற்காய்ப்
பன்னியவத்திசையினுக்கும்பாம்பந்தம்புள்ளாதிபயிலுநாட்கள்
உன்னியவுத்தரத்திற்றுங்கிழக்கிற்குமாங்கடக்கிலுறுநோய்தானே. (௪)

யாத்திரைக்கு வாரவிசேஷம்.

வேறு.

உம்பயில்குருவாராதியுத்தமம்புந்திவாரந்
தரும்புகர்வாரமாதிமத்திமமன்றித்திங்கள்
கரம்பெறுவெய்யோனாரல்கருதுவாராதிநீதாஞ்
சுரும்பணிகுழலாய்பின்னுஞ்சொற்றனர்திங்கடயோர். (௫)

திசையாத்திரைக்கு ராசி.

ஓரைகள்சரங்கண்மேனேக்குற்றவைபிரோதயங்கள்
சீரிதெத்திசைக்குமேடஞ்சிலையரிகிழக்கிற்காகுங்
காரிகைகலைகோறெற்காங்கடந்துலைதண்டுமேற்காம்
வாரிமீன்றேளேநண்டுவடக்கிற்காமடநல்லாயே. (௬)

யாத்திரைக்கு ராசி விசேஷம்.

அன்றியிலுபயவோரையறையின்மத்திமமேயாகுங்
கன்றியதிரத்திற்சேறல்கருதவுமாகாதென்பர்
நன்றுநற்கோட்களோரைநவிலுங்காலவையின்மீன
மொன்றொழிந்திடுதெனன்றென்றுரைத்தனர்சுருதியோரே. (௭)

யாத்திரைக்குவேண்டுமிராசிசுத்தம்.

விதித்தவவ்விராசியாதிவிளம்புமாறிரண்டினற்கோ
ளுதித்திடனன்றும்வெள்ளியோங்கியவேழிற்பொல்லா
தெதிர்த்தமூன்றுபன்னென்றிவையொழிந்தாகார்க்காகா
துதித்தபொன்வெள்ளியோரைதோய்தனன்றஞ்சுதூய்தே. (௮)

நக்ஷத்திர திசாசூலம்.

கிழக்கினுக்கோணங்கேட்டைகிளர்பரிபுரட்டைதெற்கு
வளக்குருள்சகடுமேற்குவடக்கிற்குத்தரமோடத்தம்
பழிப்பில்கீழாதிதிக்குப்பகர்ந்திரண்டிரண்டாய்க்கேட்டை
துளக்குறுபுரட்டைதேருத்தரமிவைசூலந்தானே. (௯)

சூலதோஷப் பிரத்தியக்ஷம்.

வச்சிரநாளிற்கிழக்கினிற்சென்றுமாவலிபெருஞ்சிறைப்பட்டான்
அச்சுறுமுரனும்புரட்டையிற்றெற்கேயடைந்தலாக்கண்ணனாலழிந்தான்
பச்சிமமதனிற்றேர்மிசைச்சென்றுபடைமுசியரிக்கசுப்பட்டான்
மெச்சுறுவடபாலுத்தரத்தேகிவீந்தனன்சம்பரன்மின்னே. (௧௦)

வாரசூலம்.

அம்புலிமந்தன்கீழ்குருதென்பாலாதவன்பார்க்கவன்மேற்கு
வம்பவிழ்புந்தியாரலுத்தரத்துவருதினச்சூலமாமதித்து
நம்புவச்சிரத்தோன்குபேரனு:திவர்களுட்டியவாதியந்தத்துத்
தம்பமாமிந்துசனிகுருவெள்ளிதபனன்மால்குசனெனச்சாற்றே. (௧௧)

திசையாத்திரையின்பலன்.

இந்திரன்றிசையிற்சேயினிலேகினிலாபமாந்தெற்கினின்மர்தன்
சந்திரன்றினத்திற்றணந்கிடிற்றனமாஞ்சாற்றியமேற்கினிற்செம்பொன்
புந்தியிலிகப்பிற்காரியமாகும்பொருந்தியவுத்தரத்தசுர
மந்திரிகனலிதினத்திடைப்படரின்மன்னியசுபமெனவழங்கே. (௧௨)

யாத்திராதிக்குவிசேஷமும், பக்ஷணமும்.

நடுப்பகலந்திநள்ளிராவுதயம்நான்கிவைகீழ்த்திசையாதி
கொடுத்ததிற்சேறலன்றிமாவிரதங்கோடாநரனெனக்குறிக்கும்
மடுத்தவாகனங்களவையுமப்படியாமனைதிலமதுபயம்நான்கும்
படிக்குமாவனையாய்கீழ்த்திசையாதிபட்சணமாமெனப்பகரே. (௧௩)

நக்ஷத்திரபக்ஷணம்.

வேறு.

அடுமுழுந்தோதனங்கிரமனைசோறானரிதாகியதாமரைக்கிழங்குகுருதி புடோல்கிருதம், படுபயமெட்சோறன்னம்பாலொடுபண்ணிகாரம்பலவன்னச்சோறுநெல்லிக் கனிகொளெட்கிழங்கு, வடிவுடைய மாதுளங்கனிநற்பாலன்னஞ்சோறுய்மதுக்கண்டுபன்றியூன்பால்பயறென்றிவைகள், தொடிபடுகைமடநல்லாய்புரவிமுதலுணவாய்ச்சொற்றனர்சோதிடந்தெரிந்ததூயவர்கடுணிந்தே. (௧௪)

திதிவாரபக்ஷணம்.. .

வேறு.

பத்திரைபசுவின்பாலொடுசோறுபயினந்தைதனக்கட்கன்னஞ்
சித்தமாஞ்சயைபண்ணிகாரமாமிரித்தைசெப்பியசர்க்கரைச்சோறு
முத்தமமானபூரணைகிழங்கோடுழுந்திவையன்றியென்றுதி
சுத்தமாநெய்பால்சூழ்குளந்திலந்ததிதுவரையோடுழுந்திவைதுய்ப்பாய். ()

பக்ஷணங்களுக்குப் புறநடை.

இப்படிவகுத்தவாரபட்சணமுமியம்பியதிதிகளினுணவுஞ்
செப்பியநாளின்பட்சணமெவையுஞ்செலவினிற்றுய்ப்பதுவிதியா
மப்படியதற்குக்காரணமல்லாததுவிடிறுடுகினுமமையுங்
கொப்புறுகுழையாயதனினுநினைக்கிற்கொண்டதின்பலனெனக்கூறே. ()

யாத்திரைக்குப் புறப்படும்விதம்.

இடத்தினிற்பவனனியங்கிடக்கோட்கட்கிருங்கனலாகுகியற்றி
யடுத்தநான்மறையோர்தங்களுக்கன்பாலரும்பொருள்கலைபலவளித்து
மடுத்துநற்றெய்வபூசையும்புரிந்துமகிழ்வுடன்றமர்வரவலமா
நடைக்கழலெடுத்தெண்ணுன்கடிநடந்துநாற்றியவாகனமேறே. (௧௭)

பிரயாணமுகூர்த்தபலனும், பிரதானதிரவியமும்.

பொற்டனைசல்ஞதனம்படையாடிபத்தசம்வாகனம்புறத்தே
விற்கிடைநூறினைம்பதின்விடுதன்மெய்ப்பிரதானமாம்விளம்பி
னற்புதமாயதன்றியுங்கிரகணமடும்புயல்வாதமென்றிவைகண்
முற்படவேழுதினத்துறிலன்றுண்முனிந்துபின்வேறுநாண்முயலே. (௧அ)

பிரயாணமாய் இத்தனைநாட்களுட் புறப்படவேண்டுமென்பது.

மேதினியிறைவற்கொன்பதாமன்றிவிரும்புமண்டலீகருக்கேழாம்
போதமாமற்றோரெவற்குமைந்தாகும்புறப்படுநாளிவைபுகலி
லாதுலர்பித்தர்பயத்தினர்கோபியரும்பிணியினருறுப்பற்றோர்
தீதறுபேடியிவர்பிறவீடுசெய்திடிற்றீதெனச்செப்பே. (௧௯)

சுபசகுனம்.

வேறு.

ஏறுகொடிவேசியர்க டேர்புரவிவேழமனை யேசின்மறையோரிருவர்
பால், நாறுமலர்பேரிவளைகோவடிசிலூனிளையநாரியர்கள்வீணைகனிதேன்,
கூறுசவமாலையிருமீன்முரசமாடையறல்கோலுகுடமாசகலவே, தேறுகுழ
லோசையெழுதிமையகல்வாய்மையிவைசேறலெதிர்சாரவினிதே. (௨0)

துன்னிமித்தம்.

மோரரவமாடையிலிநீடுமெவிழ்கேசிதுவர்மூகர்நனையாடையுடையோர்
சோரர்தயில்மேவுதலையாளர்துவராடையர்கடுமைமடவார்களலியோர்
நேர்பகைஞர்வேதனையர்தாபமுடையோர்சடிலர்நீறுடையவேடர்குருட்
ரார்கனலிலேறுகலமோர்பிரமசாரியெதிராகிலுடன்மீள்வதழகே. (௨௧)

தும்மல்விதி.

வேறு.

மல்கியகோவின்குதமதுநாசம்வருத்தமாம்பூனையின்குதமேற்
பல்கியவசமோடெருமைமங்கையர்கள்பலவுமாங்குதமதுதீதாம்
நல்கியநன்மைதருங்குதமருந்துநாற்றியவாகனமசனம்
புல்கியசயனமாசனம்வித்தைபொருந்துவித்திடற்கெனப்புகலே. (௨௨)

ஸ்திரீயாத்திரை.

மன்னுபுரட்டாதிமாசியெனுமிவைமூன்றுமதித்தசூலேல்
முன்னுயநான்காறெட்டாமாதமுங்கழித்துமொழிந்தவெள்ளி
பின்னுயபுதனிவர்கடினங்களுமுத்தரநாளும்பிரதமைதானும்
முன்னுதுமற்றெவையும்யாத்திரைபோமங்கையருக்காகாதென்னே. (௨௩)

சலயாத்திரை.

ஓணமாதிகரந்தாலமுயர்பவனம்புரவிகலமுரைதேர்விட்டுஞ்
சேணவிருமிந்நாளிற்கவிபுந்திதிங்கள்செம்பொன்றினங்களாதி
பேணுறுநற்பக்கத்துப்பிறழ்விட்டிசகுனியிரித்தைதள்ளி
வாணுதலாய்சரந்திகழோர்த்துவங்களொழிநீர்ச்செலவுமன்னுவாயே. (௨௪)

கவையிலுயர்கண்ணிறைந்தநாளவையிலுத்தமமாநாட்டியகண்ணொன்
றுவமையில்செம்பாதியுயிர்பெற்றவைகள்மத்திமமாமொழிந்தவையாகா
வவமறுகண்டகமீராறுயதிரிகோணத்திலாருநல்லோர்
கவையிலோர்மூன்றுபன்னொன்றுபெறநன்றாங்கருதுங்காலே. (உ௫)

பேதித்தபிற்பக்கத்தறைந்தவையும்பின்னிலைந்தும்பேணினன்றாஞ்
சோதித்தவிருநான்கேசுத்தமுறளவந்திடத்துச்சோமனன்றாம்
வாதித்தவிவையன்றித்திசைமாதந்தினமாதிமற்றுமெல்லாங்
காதுற்றகண்மடவாய்யாத்திரைபோற்செலச்செலவுங்கண்டுகொள்ளே. ()

கோயாத்திரை.

புரந்தரன்மாசியம்புலியங்கிபுரவிமுப்பூரமுத்தரமூன்
றுரந்தருமாயன்கலஞ்சகடப்போடொளிர்முறஞ்செக்கெனுமிவையி
னிரக்தெழுதிங்களந்தணன்வாரநேரமின்றகர்விடைசிலையாழ்
கரந்தொளிர்சீயமுதலியவோரைகலக்கக்கோயாத்திரையுயலே. (உஎ)

நாவிரண்டிடமதமூக்கறவேண்டுநாற்றியவதனிடைவெள்ளி
கோவினுநன்றாமற்றவையாவுங்குலவுகயாத்திரைப்படியே
நீலன்மாவிரவிவெள்ளிசேய்வாரநேடல்காலுதயங்கணிசியென்
றேனுமிவ்வகைகோயாத்திரைக்குற்றாலிருகுலநாசமென்றியம்பே. (உஅ)

நாற்கால் இருகாலுள்ளவைகட்கு யாத்திரைவிதி.

மதகரியயத்திற்கொட்டகமதற்குவயப்புலிகடாப்பொறியுழுவைக்
கிதமலிபசுக்கட்கிசைந்தநாற்சரணத்தெவைகட்குங்கோவெனுமிவையாற்
றிதமுறுகோவின்யாத்திரைப்படியாஞ்செப்பியவிருபதத்தெவைக்கும்
விதமலிநரர்போலெனவடவிதுக்கள்விளம்பினார்துடியிடைமின்னே. (உகூ)

யுத்தயாத்திரை.

அரிபரிமூங்கிலம்புலிகலந்தேரவிட்டமூன்றுத்தரமனுஷங்
குருகுபொன்னேர்வான்வருணனைவிரலாக்குறிக்குநாளிவைகளிலோரை
திரமரியெட்டுத்திகழ்ந்தெழமற்றுஞ்செப்பியயாத்திரைப்படியே
மருமலிகுழலாய்திஞறிகணன்றாய்வரவிகல்யாத்திரைமருவே. (௩0)

யாத்திரையில் வெற்றியடையும் லக்கின கோசரவிதி.

வேறு.

அண்டர்புரோகிதனுதிப்பவாறகத்திற்கனற்கதிரோனகத்திங்க
ளெண்டருநாவிரண்டொழியவகற்கேகினெடுந்தரங்கமிரங்குகூலத்
தெண்டிரைசூழ்மணவையர்கோன்செகராசசேகரமன் செவ்வேல்வென்றி
கண்டுதிறைபுரிந்தவர்போலுரம்பகராதஞ்சலிப்பார்கருதலாரே. (௩க)

விண்ணொன்றுபுந்திருக்கவியிவர்கள்கேந்திரத்துவிளங்கத்தீயோர்
கண்ணொன்றுமூன்றாறுபெற்றோளிரவமர்க்கேகிற்கறைதாட்குதப்
பண்ணொன்றுசததளர்த்தார்ச்செகராசசேகரமன்பகைஞர்தம்மிற்
றண்ணொன்றுவெருவுநல்போல்வினியிணைகயிலாவாந்துன்னலார்க்கே. ()

வேறு.

இரண்டிலரசன்கவியிசைந்தபுதனிற்கப்
பரந்தகதிரம்புலியதேழிடைபரிப்ப
வுரம்படுபெருங்கனலியோரையுறவேகி
னரும்பகையிரிந்துபுதலங்கைபடுமம்மா. (௧௩)

சுக்கிரனுடம்புலியகன்றுதயலக்கினத்
தொக்கவுறவம்புலியதேழிடையுதிப்பத்
திக்கிசைபொலிந்தரசர்செல்விலிகல்மல்லற்
றக்கவர்பெறும்படிதருஞ்சடைதரிப்பே. (௧௪)

ஐந்திலரசன்கவியமைந்துறவிலக்கினத்
துந்துபதினொன்றிடையுதிப்பவிருமைக்கோ
ணந்தரிசிறந்தவிருநான்கெழுநடந்தால்
வந்தெதிரெழும்பகைஞர்மாள்வரொருகோடி. (௧௫)

கட்டுகரவெங்களவியாறிடைகலப்ப
வட்டமதியேழொழியவன்னமறையோன்வந்
தொட்டியெழுமோரையெழுவெய்திலிகலோரா
ரிட்டமுளர்பொன்களிறிருந்திறையிடற்கே. (௧௬)

கண்டகவிடஞ்சுரர்குருத்தனிகலப்ப
வெண்டருபனிக்கதிரிரண்டினிலிருப்ப
மண்டலமதித்தநிருபோர்செலவுமன்னிற்
றண்டரசர்புக்கணிகொடாள்பணிவர்தாமே. (௧௭)

அங்குரவனேழினுறவாறுகுசனுகச்
சங்கனிகலோரையிடைதோயவாருமூன்றிற்
பங்குறையநான்கினெழுபண்டிதனமைந்தே
தங்கவிகல்சாரிலடையார்கள்தரியாரே. (௧௮)

ஓரையுறுகண்டகமுறும்புகர்பொனென்போர்
தாரவுயர்நல்லவர்கடாவில்விழிதோயும்
பார்வைபெறமன்னவர்கள்பாசறையிலேகிற்
சேரலர்விசும்பினிடைசேர்ந்திடுகைதிண்ணம். (௧௯)

சரக்கிரியை.

வேறு.

நக்கனுரலொடிந்திரன்மாசிமாநல்லராப்பூரமூன்றடுப்புச்
செக்குமீன்சுவைசோதியென்றிவைகளிற்செய்குருசனிசுடர்வாரந்
தொக்ககாலுதிப்பாட்சிகள்பார்வைநாட்டோய்ந்திடக்கதிர்மதிகுறைந்த
பக்கமாசயையிரித்தைகள்விட்டிகள்பயிலுநாளம்பெயப்பகரே. (௨௦)

பகைஞர்சென்மங்களட்டமராசிநாட்பயில்பொருந்தாதவையிந்து
தகையிலட்டமநாட்கள்வைநாசிகஞ்சார்ந்தநாளிராசியிற்றனக்கு
மிகவுநல்லனுகூலமதாகவேவேண்டுமக்கணைவிடுமதற்குத்
தொகையவ்வாரநாளதியரம்யோகத்தின்றோஷமூநன்றெனச்சொல்லே. ()

வேறு.

கண்டகந்தூணங்குளிகஞ்சரநாட்கள்கண்ணிலிதூமமாதியதா
யெண்டருங்கோரதோஷமாமெவையுமியம்பியசூலமாசூலந்
தண்டருந்துட்டயோகமவ்வியதிபாதநற்சகடம்வெம்முயல
மண்டியகாளயோகமென்றிவைகளாதியாயளகமாக்கணங்கே. (௬௨)

இருள் வெளி.

திசைதொறுமேழேழ்வரையமைந்தனல்கீழ்த்திசைநடுவதனில் வைத்தெண்
யிசையுநாளறைமுன்பின்மூன்றொன்பானியம்பியமூன்றுமூன்றேழு [ணி
வசையின்மூன்றுகாலிருணலந்தழும்பாமன்னியவெளியதுசாவா
மிசைபயில்விழியாய்மூன்பினும்பக்கம்விளம்பிடின்வலமிடம்வேண்டே. ()

யாத்திரைப்படலம் முற்றிற்று.

ஒன்பதாவது

மனைவினைப்படலம்.

பூபரீக்ஷை.

மேதினியதனைச்சமதலமாக்கிவிளம்பியநிலங்களாகிருதி
பேதமாங்கமழ்தலிரசமண்ணிவைகள்பெட்புறுசகுனமதெலவையுந்
தீதறவுணர்ந்துமறையவரரசர்செட்டிகள்சூத்திரராய
சாதிகணான்கிற்கமைந்ததேவாதிதங்களுக்கியைந்தவைசாற்றே. (௧)

பூமியின் நிறம்; சுவை.

தவளமந்தணனும்பொன்னிறமாயிற்சாற்றியவரசனுஞ்செம்மை
திவளுமவ்வணிகன்கருமையதாகிற்செப்பியசூத்திரனென்ப
விவைகணிறத்தினியல்புகள்சுவைகளினிமைவேதியர்க்குறுதுவர்ப்புக்
கவையில்மன்னவர்க்குப்புளிப்புவைசியர்க்குக்கார்ப்புமக்களமருக்காமே. ()

பூமியின் ஆகிருதி; கந்தம்.

வட்டநாற்கோணம்வச்சிரங்கமடமச்சமுக்கோணமாதியதாய்ப்
பட்டவாகிருதிநல்லவாங்கோணிபணிசுளகுரல்மணியோத்தி
தொட்டவானரமார்ச்சாலமாமாதிசொற்றிடிற்றீயவாம்பால்வீ
யிட்டமாங்கிழங்குநீரெனுமணநான்கிசைந்தவந்தணன்முதலியர்க்கே. ()

சகுனபலன்.

எதிரெழுஞ்சகுனநல்லவையாகிலிசைந்திடுநன்மைதீதாகில்
முதிர்பெரும்பழியென்றறியிவையின்றிமுன்னியகுழியினீர்விடுத்துத்
துதிபெறுபன்னமிட்டிடின்வலமாய்ச்சுழல்வதுநல்லதாமிடத்தே
பிதிர்வுறிற்சுரருக்கிலசந்ததாமென்றுபேசினர்மனைவிதிபின்னும். (௩)

பன்னமதமைந்துதுயிலுமவ்விராசிபாற்படிற்பழிப்பதாமென்றே
முன்னுறநடையுமிருக்கையுநிலையும்முயன்றவவ்விராசியிற்சேரிற்
றென்னவர்பரவும்பொலன்மணிக்கழலான்செகராசசேகரனென்னும்
மன்னவர்மன்னுமாதிநாரணன்சீர்பரவினர்நிகர்க்குமப்புவியே. (௫)

இராசிகளிலே துயில்வன; நடப்பன; நிற்பன; இருப்பன.

கலைவிடைமங்கைதுயிலுமீன்கொச்சைகைச்சிலைநடக்குநன்றேழு
முலைவறுஞெண்டுஞ்சிங்கமுநிற்குமோங்கியகுடந்துலைமிதுனம்
நிலைபெறவிருக்குமென்றிவையனைத்தும்நெருங்கியவனமுலைசித்ரச்
சிலைநுதன்மடவாய்முனிவருமுணர்ந்துசெப்பினராமெனத்தெளியே. (௬)

குழிலக்ஷணம்.

சானுவினுழங்கோணநான்காகத்தடங்குழிவகுத்ததைமறைப்பின்
மேனிரம்பிடினுத்தமஞ்சமமாயின்விளம்பியமத்திமமாகு
மானங்குறையிலதமமாங்குழியிற்றவளைதேளரவுமண்ணுக
மீனமாம்புழுநீறிருந்தையிந்தனமெனுமிவையுமம்மனையுறினிகழே. (௭)

எமமோடிரசதமுதும்பரஞ்சர்ப்பமியற்றியகவமணித்தொகைக
ளாமிவையிரும்புதானியமாதியவையுறிற்கிராமங்கள்கிருகந்
தோமில்பத்தனங்கள்நாடுகளன்றிச்சுராலயங்கோபுரமரங்கங்
காமருயாகசாலைமன்றலந்தைகள்கட்டநன்றுமெனக்கருதே. (௮)

வாஸ்துவின்னியாசம்.

பரித்தவட்பெரியகிராமவின்னியாசம்பகரிலவ்விதங்களெட்டவற்றில்
விரித்ததெண்டகமசுவத்திகமொடுபாரவம்விளம்பியநந்தியாவர்த்தம்
பெருத்தபிரதாமம்பரமசஞ்சிறீபிரதிட்டிதம்பிரகிரணமெனவாந்
தெரித்திவைக்குற்றவீதியுமியல்புந்தேமொழிபிறிதினிற்றெளியே. (௯)

மனைவினைப்படலம் முற்றிற்று.

செகராசசேகரமாலை முற்றுப்பெற்றது.